# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வமான ஏடு | குரல் 8 | ஜனவரி 1986 | அன்பளிப்பு ரூ. 2



# போராட்டம் தொடரும்

"ஒரு சுதந்திரமான, இறைமையுடைய தனியரசை அமைப்பதன் மூலமே தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஏற்படும். சுதந்திர தமிழீழமே எமது அசைக்க முடியாத அரசியல் இலட்சியம். எமது தாயகத்தை மீட்டு சுதந்திரத்தனியரசைப் பிரகடனப் படுத்தும் வரை நாம் தொடர்ந்து போராடியே தீருவோம்."

*இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சமீபத்தில் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.*



தர்மமும் உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கிறது. அதுவே எமது பலம்.

திரு. பிரபாகரன் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

எமது தேசிய சுதந்திரப் போராட்டம் இன்று முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஒரு உள்நாட்டு நெருக்கடியாகத் தோன்றிய எமது பிரச்னை இன்று உலகத்தை ஈர்க்கும் ஒரு சர்வதேச நெருக்கடியாக விஸ்வரூபம் கொண்டுள்ளது. சிங்கள அரசானது எம்முடன் தனித்து நின்று போராடவில்லை. ஏகாதிபத்திய நாசகார சக்திகள் அனைத்தையும் தனக்குப் பக்கபலமாக அணி திரட்டி எமது மக்களுக்கு எதிராக ஒரு இன ஒழிப்பு யுத்தத்தை நடத்தி வருகிறது. இந்த ஏகாதிபத்திய நாசகார சக்திகளின் ஊடுருவல் இந்திய உபகண்டத்தின் ஸ்திர நிலைக்கும், இந்துமா சமுத்திர பந்தோபஸ்து நிலைக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்ததால் இந்திய அரசு இப் பிரச்னையில் தலையிட்டது. சமாதானப் பேச்சுக்கள் மூலம் ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்தி இந்த நெருக்கடியைத் தணித்து விடலாம் என நம்பியது. இந்த அரசின் நல்லெண்ண முயற்சிக்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்க விரும்பவில்லை. தமிழீழ மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்னைகளை தீர்த்து வைப்பதிலோ அல்லது அவர்களது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதிலோ ஜெயவர்த்தன அரசுக்கு துளிகூட அக்கறை இல்லை என்பது நமக்கு நன்கு தெரியும். நீண்டதும், கசப்பானதுமான வரலாற்று அனுபவம் எமக்கு சில அரசியல் உண்மைகளைப் புகட்டியிருக்கிறது. ஆனால் புதிய பாரதப் பிரதமரின் நேர்மையான நல்லெண்ண முயற்சிக்கு நாம் எவ்வகையிலும் குந்தகமாக இருக்கவில்லை. ஜெயவர்த்தன அரசின் சர்வாதிகாரக் கொடுங்கோன்மை ஆட்சியின் அட்டூழியங்களை அம்பலப் படுத்துவதோடு, தமிழர் பிரச்னையை நியாயமான முறையில் தீர்த்து வைப்பதில் சிங்கள அரசுக்கு எவ்வித விருப்பும் இருக்கவில்லை என்பதை பகிரங்கப் படுத்தவும் எமக்கு ஒரு அரிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே நாம் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கினோம். பேச்சு வார்த்தைக்கு சம்மதித்தோம்.

நாம் தீர்க்கதரிசனத்துடன் அனுமானித்தபடி தமிழீழ மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தழுவிய எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டமும் சிங்கள அரசினால் முன் வைக்கப் படவில்லை. தமிழ் மக்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட பழைய, புளித்துப் போன திட்டங்கள் புதிய போர்வைகளில் மீண்டும், மீண்டும் மேசைக்கு வந்த போது நாம் அவற்றை நிராகரித்தோம். சிறீலங்கா அரசு முன் வைத்த திட்டங்கள் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை இந்திய அரசு ஒத்துக் கொண்டது.

எமது கோரிக்கை என்ன, எமது அரசியல் இலட்சியம் என்ன என்பதில் நாம் மௌனமாக இருந்து விடவில்லை. எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிய திட்டம் ஒன்றை நாம் முன் வைத்தோம். நாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலும், வரலாற்று ரீதியாக அமைந்த எமது பாரம்பரிய தாயகப் பூமி எமது சொத்துடைமை என்பதாலும் எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை எமக்குண்டு. இந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே எமது தனியரசுப் போராட்டம் அமைந்திருப்பதால் எமது போராட்டம் நியாயமானது என்பதை விளக்கியிருந்தோம். தேசிய சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டம் நீண்ட வரலாற்றையுடையது. பல வடிவப் போராட்டங்களால் பரிணமம் பெற்றது. காந்தியப் பாதையில், அமைதி வழிப் பாதையில், மொழி உரிமை கோரி, சம உரிமை கோரி, சமஷ்டி கோரி நடைபெற்ற அகிம்சை வடிவப் போராட்டங்கள் அனைத்துமே எதிரியின் இராணுவ ஒடுக்குமுறையால் அடக்கியொடுக்கப் பட்டன. இறுதியில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# புலிகளின் குரல்

# விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும்

புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துவைத்து தமிழீழ அரசியல் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை, ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திய பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும். நாம் மக்களுக்காகவே ஆயுதம் ஏந்தினோம். மக்களின் சுதந்திரத்திற்காக, மக்களின் சுபிட்சத்திற்காகவே நாம் ஆயுதப் போராட்டப் பாதையைத் தழுவினோம் எமது மக்களுக்கு இழைக்கப்பட்டுவந்த அநீதியும், அதர்மமும், அக்கிரமங்களும் எம்மை ஆவேசம் கொள்ளச் செய்தன. அந்த ஆவேசத்திலிருந்து எழுந்த சுதந்திர வேட்கை எம்மை ஆயுதபாணிகளாக்கியது. நாம் ஏந்திய ஆயுதங்கள் தர்மத்தின் கேடயங்கள்; சுதந்திரத்தின் ஒளிகாட்டிகள்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலான எமது ஆயுதப்போராட்ட வரலாறு அளப்பரிய தியாகங்களைக் கொண்டது. அற்புதமான அர்ப்பணிப்புகளைக் கொண்டது. எமது விடுதலை வீரர்கள் வியப்புமிக்க வீரகாவியங்களைப் படைத்தனர். அந்த மகத்தான இளைஞர்களின் இலட்சியவெறிகொண்ட இரத்தத்தினால் எழுதப்பட்டதுதான் எமது வரலாறு. நாம் மக்களுக்காகவே இரத்தம் சிந்துகிறோம்; மக்களுக்காகவே மடிந்துபோகிறோம். மக்கள் என்ற புனித ஆலயத்திற்கு எமது உயிர்களை காணிக்கையாக அர்ப்பணிக்கிறோம். நாம் மக்களின் போராளிகள். இரத்தம் சிந்தும் எமது போராட்ட வரலாறு எமது மக்களின் வீர வரலாறு.

மனித விடுதலைக்காக, சமூக தர்மத்திற்காகப் போராடும் எந்த ஒரு விடுதலை இயக்கமும் மனிதாபிமானத்தையும் மனித நேயத்தையும் முதன்மைப்படுத்தும் அறநெறிப் பண்புகளில் கட்டியெழுப்பப்படவேண்டும். எமது விடுதலை இயக்கம் இந்த ஒழுக்க மரபில் நெறிப்படுத்தப்பட்டது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அறநெறிப் பண்புகளில் வார்க்கப்பட்டவர்கள் எமது வீரர்கள். வீரமும், தியாகமும், மக்கள் நேயமும் எமது ஒழுக்க மரபின் ஜீவநாடிகள். ஆகவே அன்றிருந்து இன்றுவரை எமது விடுதலை இயக்கமானது மக்கள் உறவுக்கு பெரும் மதிப்பளித்துவருகிறது. ஒரு புரட்சிகரப் போராட்டத்தில் மக்களின் மகத்துவத்தை, மக்களின் அபாரமான சக்தியை உணர்ந்து நாம் மக்களோடு நெருங்கிய அன்புறவை வளர்த்து வருகிறோம். மக்களோடு ஒன்றி வாழ்ந்து மக்களின் நிதர்சன வாழ்வோடு சங்கமித்து, மக்களின் அன்றாடத் தேவைகளை பிரச்னைகளை, அபிலாசைகளை அறிந்து, அவற்றின் அடிப்படையில் எமது சிந்தனையையும் செயற்பாட்டையும் செழுமைப்படுத்தி வருகிறோம். களத்தில் எதிரியோடு போராடுவதுடன் மட்டுமல்லாது மக்களின் சமூக பொருளாதார வாழ்வினை மேம்படுத்துவதிலும் நாம் அயராது உழைத்துவருவதை எமது மக்கள் நன்கறிவர். மக்களின் அரசியல் விடுதலை மட்டுமன்றி அவர்களது சமூக, பொருளாதார விடுதலையும் எமது இலட்சியம் என்பதை நாம் எமது செயல்மூலம் நிரூபித்து வருகிறோம். விடுதலைப் புலிகளே மக்களின் புரட்சிகர முன்னணிப் படை என்பதை எமது செயற்பாடுகளிலிருந்து தமிழீழ மக்கள் இன்று முழுமையாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

எந்த ஒரு புரட்சியும் மக்கள் களத்திலிருந்தே பிரவாகமெடுக்கிறது. மக்களே புரட்சியின் சிருஷ்டி கர்த்தாக்கள். மக்கள் சக்தியே வரலாற்றின் சக்கரத்தை இயக்கும் சக்தி. மக்களின் பங்களிப்பின்றி எந்தவொரு புரட்சியும், எந்தவொரு விடுதலைப் போராட்டமும் வெற்றிபெறப் போவதில்லை. உலகளாவிய இந்த வரலாற்று உண்மையை எந்தவொரு சமூகப் புரட்சிவாதியும் மறுக்கப் போவதில்லை. மக்கள் சக்தியின் புரட்சிகரத் தன்மையைப் புரிந்துகொண்டவர்கள்தான் உண்மையான புரட்சிவாதிகள்.

இன்று தமிழீழத்தில் புரட்சி என்ற பெயரால் ஒரு எதிர்ப்புரட்சி நடைபெற்றுவருகிறது. மக்கள் விடுதலை என்ற அரசியல் இலட்சியத்தோடு தோற்றம்கொண்ட அமைப்புகள் பல இன்று மக்கள் விரோத சக்திகளாக மாற்றம் கொண்டுள்ளன. மக்களை மிரட்டி, மக்களைச் சுரண்டி, மக்கள் சொத்துக்களைச் சூறையாடி, மக்களை ஒடுக்கி அடக்கி வரும் இந்தப் போராளிகளால், தமிழீழத்தில் ஒரு அராஜக நிலை தோன்றியுள்ளது. இந்தப் 'புரட்சி' இயக்கங்களுக்கு எதிராக புரட்சிப் போராட்டம் நடத்த வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

இந்த விடுதலை இயக்கங்கள் சமூக தர்ம மந்திரத்தைக் கூறுகின்றன. மனிதாபிமானம், மக்கள் உரிமைபற்றிப் பேசுகின்றன. மக்கள் அமைப்பு என்றும் மக்கள் இயக்கம் என்றும் தமக்குத்தாமே முத்திரைகளைக் குத்திக்கொள்கின்றன. ஆனால் இவர்கள் ஓதுவது வேதாந்தம், இடிப்பது கோவில். மக்களை ஏறி மிதித்துக்கொண்டு ஒரு மக்கள் புரட்சியை நடத்திவிடலாம் என இவர்கள் நினைக்கிறார்கள் போலும். இந்தப் போலி இயக்கங்களின் பொறுப்பற்ற செயற்பாட்டில் இன்று தமிழீழ மக்கள் பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள்.

இன்று எமது மக்கள் மிகவும் நெருக்கடியான, மிகவும் ஆபத்தான காலகட்டத்தை எதிர்நோக்கி நிற்கிறார்கள். போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்று உலகிற்கு ஏமாற்று வித்தையை காட்டிக்கொண்டு எமது எதிரியானவன் எமது மக்களைப் பூண்டோடு அழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கிறான். எதிரியின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. நாளுக்கு நாள் எமது மக்கள் செத்துமடிகிறார்கள். எமது வீடுகள் எமது கல்லறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. எமது கிராமங்கள் சுடுகாடுகளாக மாற்றப்பட்டு வருகின்றன. சிங்கள இனவாதப்பூதமானது எமது தாய்ப் பூமியை மெல்ல மெல்ல விழுங்கிக் கொண்டு வருகிறது. எமது சொந்த மண்ணில், நாம் பிறந்த மண்ணில் பண்டைக்காலம் தொட்டு நாம் வாழ்ந்து வரும் எமது பாரம்பரிய மண்ணில் எமது மக்கள் அகதிகளாக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு அழித்தொழிக்கப்படுகிறார்கள்.

அரச பயங்கரவாத ஒடுக்குமுறை ஒரு புறமும் ஆயுதம் தரித்த இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் மறுபுறமுமாக இன்று எமது மக்கள் இரு துருவ நெருக்குதலில் சிக்குப்பட்டுத் தவிக்கிறார்கள். ஒடுக்கப்படும் எமது மக்களின் விடிவுக்காகப் போராடவேண்டிய இயக்கங்கள், நொந்துபோயிருக்கும் மக்கள்மீது மேலும் அடக்குமுறையைத்திணிப்பது மன்னிக்கமுடியாத மக்கள் விரோதச் செயல் என்றே நாம் கருதுகிறோம். இந்த மக்கள் விரோத எதிர்ப்புரட்சி சக்திகளை இனம்கண்டு ஒதுக்குவது மக்களின் இன்றைய தலையாய கடமையாகும். ஒரு புரட்சியின் வரலாற்றுப் பாதையை நிர்ணயிப்பது மக்கள் சக்தியின்றி வேறொன்றுமல்ல. மலைபோன்ற மக்கள் சக்திக்கு எதிராக நீட்டப்படும் ஆயுதங்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்கப்போவதில்லை.

உண்மையான புரட்சிப் போராளிகள் யார், போலிப் புரட்சிவாதிகள் யார், என்பதை போராளிகளின் ஒழுக்க நெறியில் இருந்து, கட்டுப்பாட்டிலிருந்து, அவர்களது செயற்பாட்டில் இருந்து மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும். இலட்சியப் பற்றும் மக்கள் பற்றும் கொண்ட ஒரு உன்னதமான புரட்சி அமைப்பைக் கட்டி எழுப்புவதிலேயே எமது மக்களின் எதிர்காலம் சுபிட்சமாக அமையும்.

---

தனியரசுக் கோரிக்கை பிறந்து, அது புரட்சிகர ஆயுதப் போராட்ட வடிவம் பெற்றது. இப்படியாக தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றின் உச்சகட்டமாகவே தமிழீழக் கோரிக்கையும், அதனை அடையும் மார்க்கமாக ஆயுதப் போராட்டமும் பரிணமித்தது என்பதை விளக்கியிருந்தோம். தமிழீழ மக்களின் தேசியத்திற்கும், தாயகத்திற்கும், தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் உத்தரவாதமளிக்கப்படாத எந்த ஒரு தீர்வையும் நாம் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதே எமது உறுதியான நிலைப்பாடாக இருந்தது. ஆனால் சிங்கள அரசு எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அடிப்படைக் கோட்பாடுகளை எல்லாம் பரிசிலனை செய்யாமலே நிராகரித்து விட்டது. ஈழத் தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனமல்ல; அவர்களுக்குப் பாரம்பரியமாக தாயகம் எதுவுமில்லை; அவர்களுக்கு தமது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை இல்லை என்ற ரீதியில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எல்லாம் கதவடைத்து விட்டது சிங்கள அரசு.

இந்த நிலையில் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு எமக்கு எந்த அடிப்படையும் இருக்கவில்லை. அப்படித் தொடர்ந்து பேசுவதிலும் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. எமது அரசியல் இலட்சியங்களைக் கைவிட்டு, எமது சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்டு, ஆயுதங்களைக் கைவிட்டு, சுய-கௌரவத்தைக் கைவிட்டு, அடிமைகளாக சிங்கள சர்வாதிகாரத்தின் கீழ் நாம் நசுக்கப்பட்டு வாழ வேண்டுமென சிங்கள அரசு விரும்புகிறது போலும். பேச்சு வார்த்தை என்ற வலை விரிப்பில் எம்மைச் சிக்க வைத்து, சுதந்திர வீரர்களான எம்மை அடிமைகளாக்கி, அழித்தொழிப்பதுதான் ஜெயவர்த்தனாவின் சூத்திரதாரத் திட்டம். இந்தப் பொறிக்கிடங்கில் விழுந்துவிட விடுதலைப் புலிகள் தயாராக இல்லை.

பேச்சு வார்த்தை என்ற நாடகத்தில் போலி வேடம் பூண்டு உலகத்தையும், இந்தியாவையும் ஏமாற்றிக் கொண்டு, அதே சமயம் தமிழீழத்தில் மிகவும் பயங்கரமான இனக்கொலையை கட்டவிழ்த்து விட்டது சிங்கள அரசு. சிங்கள இராணுவத்தின் பேயாட்டத்தில் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப் பட்டனர். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், தமிழரின் வரலாற்றுச் சிறப்புடையதுமான திருகோணமலையில் சிங்கள முப்படைகள் மாபெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டன. போர்க் கப்பல்களிலிருந்து பீரங்கியால் தாக்கியும், ஆகாயத்திலிருந்து குண்டுமாரி பொழிந்தும் நடத்தப்பட்ட இந்த மிருகத்தனமான தாக்குதலில் இருபத்தைந்து தமிழ்க் கிராமங்கள் வரை நாசம் செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கானோர் கொல்லப் பட்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து அகதிகளாக விரட்டியடிக்கப் பட்டனர். இவ்விதமாக தமிழரின் தாய்ப் பூமியை கபளீகரம் செய்து கொண்டு, தமிழ் மாநிலத்தை சுடுகாடாக மாற்றிக் கொண்டு, தமிழரை இன வாரியாக அழித்துக் கொண்டு, சமரஸம் பேசுவோம் வாருங்கள் என்று எம்மை அழைக்கிறது சிங்கள அரசு. அவர்களைப் பொறுத்தவரை இந்தப் பேச்சு வார்த்தை என்பது வெறும் கேலிக் கூத்து. தமிழர் இனக் கொலையை மூடி மறைத்து, இந்திய அரசை ஏமாற்றும் நோக்கத்துடனேயே தாம் சமாதானப் பிரியர் என்ற வகையில் போலி வேடம் பூண்டு, அற்புதமாக நடிக்கிறார்கள்.

சிங்கள இனவாத ஆட்சியாளர் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தெட்டத் தெளிவாகியுள்ளது. எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் பூதமாகத் திரித்துக் காட்டி, சுதந்திரப் போராளிகளை வன்முறைப் பித்தர்களாக சித்தரித்துக் காட்டி இராணுவ ரீதியாக எம்மை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். இந்த இலக்கில் அவர்கள் முழு சிங்கள தேசத்தையுமே இராணுவ மயமாக்கி வருகிறார்கள். பெரியதொரு இன யுத்தத்திற்கு ஆயத்தங்கள் செய்து வருகிறார்கள்.

சிங்கள இனவாத அரசின் இந்த நாசகாரத் திட்டத்தை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது அவா. ஜெயவர்த்தனா இனத் துவேசம் கொண்ட ஒரு பாசிஸ சர்வாதிகாரியே அன்றிப் பரந்த நோக்குடைய சமாதானப் பிரியர் அல்ல. அவரது தனிப்பட்ட அரசியல் வரலாறானது தமிழரின் இரத்தத்தாலும், கண்ணீராலும் எழுதப்பட்டது. அவர் அரசியலில் புகுந்த காலம் தொட்டு இன்று வரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழினத்தின் உரிமைகளைப் பறித்தெடுப்பதில்தான் அக்கறை காட்டி வந்திருக்கிறார். தமிழினத்தை படிப்படியாக ஒழித்துக் கட்டி, இலங்கையை ஒரு சிங்களத் தீவாக, ஒரு பௌத்த பூமியாக மாற்றுவதையே அவர் தமது வாழ்க்கையின் உன்னத இலட்சியமாகக் கொண்டவர். இந்த சிங்கள-பௌத்த இனவெறியர் தமிழரின் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்து வைப்பார் என்பதில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை.

ஜெயவர்த்தனா ஒரு சூத்திரதார அரசியல்வாதி என்பதையும், நம்ப முடியாத ஏமாற்றுப் பேர்வழி என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டவர் முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அம்மையார். ஜெயவர்த்தனா அரசானது தமிழர் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வைத் தேடாது, தமிழரை ஒழித்துக் கட்டுவதில்தான் முனைந்து நிற்கிறது என்பதை அவர் தமது அனுபவ மூலமாகக் கண்டறிந்தார். இதனால் அவர் ஜெயவர்த்தனா அரசு மீது வெறுப்புக் கொண்டிருந்ததோடு, ஈழத் தமிழர் மீது அனுதாபமும், அக்கறையும் காட்டி வந்தார். புதிய பாரதப் பிரதமர் சமாதானப் பிரியர். தமிழரின் பிரச்னையில் தனிப்பட்ட அக்கறை கொண்டவர். தமிழ் மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக, நிம்மதியாக வாழ வேண்டும் என விரும்புபவர். அவரது நற்போக்கையும், நல்லெண்ண முயற்சியையும் ஆதரிப்பது போல ஜெயவர்த்தனா அரசு நடித்துக் கொண்டாலும், சமாதானத் தீர்வில் எவ்வித அக்கறையும் எடுக்காது. இந்திய அரசை தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு எதிராக முடிந்து விடுவதில்தான் முற்று முழுதாக முனைந்து வருகிறது. ஜெயவர்த்தனாவின் இந்த நயவஞ்சக ராஜதந்திரச் சூழ்ச்சியை நாம் நன்கு அறிவோம். இதனை இந்திய அரசும் வெகு விரைவில் புரிந்து கொள்ளும் என்பதே எமது நம்பிக்கை.

தமிழீழத் தனியரசே எமது அசைக்க முடியாத அரசியல் இலட்சியம். இந்த இலட்சியத்தை அடையவே நாம் உயிரை அர்ப்பணித்துப் போராடி வருகிறோம். ஒடுக்கப்படும் எமது மக்களின் அரசியல் அபிலாசையும் அதுவே. வேறு எந்த மாற்றுத் திட்டமும் எமது மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய மாட்டாது என்பதே எமது கருத்து. மூன்றும் உலகத்து ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டங்களை கௌரவித்து, ஆதரித்து வரும் பாரத நாடு ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இந்திய மக்களின் அங்கீகாரம் எமக்குக் கிட்ட காலம் பிடிக்கலாம். ஆயினும் நாம் அதற்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்போம்.

தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கிறது. அதுவே எமது பலம். அதர்மமும், பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கிறது. அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்வது நாம். ஏனெனில் என்றுமழியாத தர்மம் எமக்குப் பக்கபலமாக இருக்கிறது.



தமிழீழத் தனியரசே எமது அசைக்க முடியாத இலட்சியம். இந்த இலட்சியத்தை அடையவே நாம் உயிரை அர்ப்பணித்துப் போராடி வருகிறோம்.



நிலவு முகில்களுடன் ஒளிந்தும், வெளியேறியும் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது.

இரவின் நிசப்தம்.

வவுனியா நகரிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள இறம்பைக்குளம், தோணிக்கல், சூசைப்பிள்ளையார்குளம், கூடமாங்களம், மூன்று முறிப்பு ஆகிய கிராமங்கள் தூங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த நேரம்.

ஒன்றிரண்டு 'டிராக்டர்'கள் இப்பொழுதும் வயலில் உழுது கொண்டிருந்தன. அந்தச் சத்தம் மட்டுமே காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது.

குடிசை வீடுகளில் விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டன.

*  *  *  *

திடீரென - வயலில் உழுது கொண்டிருந்த 'டிராக்டர்' ஒலிகளைவிட மேலும் யந்திர வாகனங்களின் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

நாய்கள் விழித்துக் கொண்டு குரைக்கத் தொடங்கின.

வாகனச் சத்தங்கள் பெரிதாக மிக அண்மையில் கேட்டன. 50-க்கு மேற்பட்ட ட்ரக்குகளும், ஜீப்புகளும், கவச வாகனங்களும் கிராமங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டன.

400-க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவ வீரர்கள் கிராமங்களுக்குள் நுழைந்தனர்.

*  *  *  *

மனித வேட்டை ஆரம்பமாகியது.

கிராமங்களில் இருந்து அழுகுரல்களும், அவலச் சத்தங்களும் வானைப் பிளந்தது.

கண்ணை மூடிக் கொண்டு சுட்டுத் தள்ளியது ராணுவம். முதுகிலும், வயிற்றிலும், முகத்திலும் துப்பாக்கி ரவைகள் துளைத்தன.

தாயை அணைத்துக் கொண்டிருந்த குழந்தைகள் தாயின் இறுகிய பிடியிலிருந்து பிடுங்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

வீடு வீடாக நுழைந்து இளைஞர்களைத் தெருவிற்கு இழுத்து வந்து வரிசையாக நிறுத்தினர்.

கைகளை உயர்த்தியபடி அப்பாவி இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர்.

'சுடு' என்ற ஆணை பிறந்ததும் அத்தனை இளைஞர்களும் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

தாய்மார்கள், இளம் பெண்கள் - தலைமுடியில் பிடித்துத் தரதரவென்று இழுத்து வரப்பட்டு இம்சைப் படுத்தப் பட்டனர். துப்பாக்கிக் கத்தியால் வயிறுகள் கிழிக்கப் பட்டன. குடிசைகள் தீ நாக்குகளைக் கக்கிக் கொண்டிருந்தன.

வயல்கள் எரிக்கப் பட்டன.

கிராமங்கள் முழுவதுமே புகை மண்டலமாகியது. மக்கள் சிதறி ஓடினர்.

உயிரைக் காப்பாற்றக் காடுகளுக்குள்ளும், பற்றைகளுக் குள்ளும் பதுங்குவதற்கு இடம் தேடி ஓடினர். அவர்களையும் விட்டு வைக்கவில்லை வெறி பிடித்த கும்பல். வானத்தில் ஹெலிகாப்டரில் வந்து சிதறி ஓடிய மக்களைச் சுட்டுத் தள்ளினர். பெட்ரோல் குண்டுகளை வீசினர்.

சில குடும்பங்கள் முற்றாக அழிக்கப் பட்டன.

சில குடும்பங்களில் ஒரே ஒரு அங்கத்தவரைத் தவிர ஏனையோர் கொல்லப் பட்டனர்.

தாயைப் பிரிந்த பிள்ளையும், கணவனை இழந்த மனைவியும், சகோதரர்களை இழந்த சகோதரிகளும் எழுப்பிய மரண ஓலங்கள் பூமியை அதிரச் செய்தன.

அயற் கிராமங்களான கல்லாண்டகுளம், பாவற்குளம் ஆகிய கிராமங்களும் அதே இரவின் முடிவில் தாக்கப் பட்டன.

கோரச் செயலை நடத்திய இரத்த வெறி பிடித்த சிங்கள ராணுவம் அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும் வவுனியா நகரத்திற்கு நகரத் தொடங்கியது. இரண்டு நாட்கள் வவுனியா நகரம் தொடர்ச்சியாகத் தாக்கப் பட்டது. வவுனியா நகர மக்களின் இரத்த வெள்ளத்தில் குளித்துக் கூத்தாடியது சிங்கள இராணுவம்.

தமிழர் கடைகள் சூறையாடப்பட்டுப் பின்னர் எரிக்கப் பட்டன.

## சிங்கள அரசின்



## சிங்கள அரசின்



## சிங்கள அரசின்



## வெறியாட்டம்



## வெறியாட்டம்



காயம் பட்டவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல யாரும் இருக்கவில்லை.

காலில் காயம் பட்டவர்கள்கூட இரத்தப் பெருக்கினால் இறந்து போனார்கள்.

இரண்டு நாட்கள் நடத்திய இந்த வெறியாட்டம் மூன்றும் நாள் காலையில் உலகிற்குக் காட்சியளித்தது.

தெருவில் - ஒழுங்கைகளில் - வயல் வரம்புகளில் - குடிசை வாசலில் - வீட்டு மூலையில் - நிமிர்ந்தும் - சுருண்டும் - குனிந்தபடியும் - வாய் திறந்தபடியும் - முகம் சிதைந்த படியும் - நிர்வாணமாயும் - அரை ஆடையுடனும் - கைகள் அற்றும் - கால்கள் அற்றும் - பிணங்கள் - மனிதர்கள்.

எமது இனத்தவர்கள். தமிழீழத்தின், வவுனியா மண்ணின் மைந்தர்கள். அப்பாவிக் குடிமக்கள்.

ஏறக்குறைய 150 பேர் கொல்லப் பட்டனர். 150 மனித உயிர்கள். இவர்களில் 40 உடல்கள் மட்டுமே வவுனியா வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டது.

இவற்றுள் 10 வயதிற்கு உட்பட்ட 8 குழந்தைகளும் காணப் பட்டனர். ஏனைய உடல்களை ராணுவமே ட்ரக்குகளில் கட்டி இழுத்துச் சென்றது. அங்கங்களை இழந்த நிலையில் மோசமான காயங்களுடன் வைத்தியசாலையில் பலர் அனுமதிக்கப் பட்டனர்.
அமைதியையும், அகிம்சையையும் பரப்ப வேண்டும் என்று வவுனியாவில் அமைக்கப்பட்ட 'சர்வோதய இயக்க'த் திற்குப் பொறுப்பாக இருந்தவரையும், அவரது மனைவி, மகள், தாய், தந்தை ஆகியோரையும் மிருகத்தனமாகச் சுட்டுத் தள்ளியது அந்த ராட்சசக் கூட்டம்.

*  *  *  *

இதே அட்டூழியம், இதே கோரம், இதே வெறியாட்டம் கிழக்கிலே ஆரம்பிக்கிறது.

திருகோணமலை மாவட்டம் முழுவதுமே முப்படையின் வெறியாட்டத்திற்குள்ளாகிறது.

முப்படையுடன் சாதாரண மக்கள் என்ற போர்வையில், ஊர் காவற்படை என்ற பெயரில், ஆயுதந் தரித்த சிங்களக் குண்டர்களும் சேர்ந்து கொள்கிறார்கள்.

இம்மாவட்டத்திலுள்ள பன்குளம், சாம்பல் தீவு, குச்சவெளி, இறக்கண்ணி ஆகிய இடங்கள் மிக மோசமான தாக்குதல்களுக்கு உள்ளாயின.

சாம்பல் தீவில் வீடுகளுக்குள் புகுந்து அப்பாவி மக்களைத் தெருவுக்கு இழுத்து வந்து வரிசையாக நிறுத்தினர். முதியவர், குழந்தைகள், பெண்டுகள் என்று பாராமல் யாவரையும் இழுத்து வந்து நிறுத்தினர். செய்வதறியாது திகைத்து, மிரள மிரள விழித்துக் கொண்டிருந்த அப்பாவித் தமிழ் உயிர்கள் ஹிட்லரின் நாஜிப் படைகள் செய்தது போல் நடுத் தெருவிலேயே ஒரு கணப் பொழுதில் சுட்டுத் தள்ளப் பட்டன. நாய்களைச் சுடுவது போல் காட்டு மிராண்டித் தனமாகத் தனது குரூரத்தை செயலில் காட்டியது சிங்கள ராணுவம்

பன்குளம் என்ற இடத்தில் ஊர் காவற்படை வாள்களினாலும், கத்திகளினாலும் அப்பாவித் தமிழ் மக்களின் வீடுகளுள் புகுந்து ஒன்றுமறியா மக்களை வெட்டிக் கொன்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் இரண்டு நாட்களுக்குள் சுமார் 100 தமிழ் மக்கள் கொல்லப் பட்டனர்.

ஆயிரக் கணக்கான மக்கள் வெளியேறினர்.

தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாகினர் மக்கள்.

தமிழ் மொழி செழித்தோங்கிய பாரம்பரியப் பிரதேசத்தில் தமிழ் மக்களின் இரத்தம் ஆறாகப் பெருகி ஓடியது.

புகை மண்டலங்களும்... இரத்தச் சேறும்... பிண வாடையு மாய்... எமது நிலம் - எமது கடல் - எமது வானம்.

*  *  *  *

எமது மக்கள் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் செய்தி திம்புவை அடைகிறது. தமிழ் மக்களின் துயர் துடைக்கவெனப் போர்க் கோலம் பூண்ட எமது போராளிகள்... பேச்சு வார்த்தையின் இந்தக் கபட நாடகத்தினை மனதிற் பதித்தபடி... இதயத்தினுள் சோகத் தையும்... ஆத்திரத்தையும் சுமந்தபடி மிகப் பெரிய பொறுப்புடன் பேச்சு வார்த்தையிலிருந்து வெளி நடப்புச் செய்கின்றனர்.













# விடுதலையும்

பிரான்ஸ் பனன் (FRANTZ FANON) ஒரு புரட்சிகரச் சிந்தனையாளர். அல்ஜீரிய தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணி வகித்த ஒரு முக்கிய தலைவர். அவரது புரட்சிகரத் தத்துவார்த்தப் படைப்புகள் அல்ஜீரியப் புரட்சிக்கு அடித்தளமாக அமைந்ததுடன் ஆபிரிக்க தேசிய சுதந்திர எழுச்சிகளுக்கும் பெரும் உத்வேகத்தை அளித்தன.

தேசிய சுதந்திர எழுச்சிகளின் வரலாற்று யதார்த்தத்தை பனன் மிகவும் துல்லியமாக ஆய்வு செய்கிறார். கறுப்பு ஆபிரிக்காவில் தாண்டவமாடிய காலனித்துவச் சுரண்டலின் மனிதாபிமானமற்ற கொடூரத்தை அவரது எழுத்துக்கள் படம் பிடித்துக்காட்டுகின்றன. ஒரு சமூகத்தின் அரசியல் பொருளாதார, கலாச்சாரப் பரிமாணங்களில் ஊடுருவும் ஏகாதிபத்தியச் சுரண்டல் முறையானது எவ்விதம் அம்மக்களின் வாழ்க்கையை சீர்குலைத்து விடுகிறது என்பதை அவர் மிகவும் திறமையாகச் சித்தரித்துக்காட்டுகிறார். ஏகாதிபத்தியவாதிகளின் அதர்மமான அடக்கு முறையை உடைத்தெறிய வேண்டுமாயின் ஆயுதப் போராட்டமே அதற்கு ஒரேவழி என்பதை பனன் சதா வலியுறுத்தி வந்தார்.

பனனின் தத்துவார்த்தப் படைப்புகள் வன்முறை அரசியலுக்கு ஒரு தார்மீக மகத்துவத்தை அளிக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை வன்முறையானது அத்தியாவசியமான, வரலாற்றுக் கட்டாயமான ஒரு அரசியற் போராட்ட வடிவம் என்பதை அவர் வலியுறுத்துகிறார். அநீதிக்கு எதிராகத் தொடுக்கப்படும் வன்முறை தர்மமானது புரட்சிகரத்தன்மையுடையது என்பது அவரது கருத்து. மனித சுதந்திரம் ஆன்மீக ரீதியானது எனச் சுட்டிக் காட்டும் அவர் அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்களின் விடிவுக்கு வழிகோலும் வன்முறைப் போராட்டங்கள் உன்னதமான தார்மீக இலட்சியத்தை உடையன என்கிறார்.


ஒடுக்குமுறை ஆட்சியில் இருந்து ஒரு தேசிய இனம் தனது விடுதலையை, தேசிய மறுமலர்ச்சியை, பெற வேண்டுமாயின் அது வன்முறையினால் தான் முடியும். ஒடுக்குமுறை ஆட்சியில் இருந்து புரட்சிகர மக்கள் சமூகம் தனது கையில் ஆட்சியைப் பெற்றுக் கொள்வதை இது குறிக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் மிகக் குறைந்த கோரிக்கையில் இருந்து, அவர்களின் பிரச்னையிலிருந்து, வாழ்வோட்டத்திலிருந்து இது வெடிக்கிறது. அடக்கப்பட்ட மக்களின் இப்புரட்சிகர எழுச்சி அடக்குமுறையாளர்களை சித்தப்பிரமைக்குள்ளாக்குகிறது.

தேசிய விடுதலை ஒரு அற்புத நிகழ்ச்சி அல்ல. அது ஒரு சரித்திர நிகழ்ச்சி. இரண்டு சக்திகளின் மோதலில் இருந்து இது விளைகிறது. அடக்குமுறையாளர்களின் வன்முறை மயமான ஆட்சியிலிருந்தே இது பிறக்கிறது. தேச மக்களை துப்பாக்கி முனையில் அடக்குவதினால் மக்கள் வன்முறையைக் கையாளுகின்றனர். இந்த அடக்குமுறையாளர்களை இரகசியமாக அழிக்க முடியாது. பார்வையாளர்களாக இருந்த மக்கள் சரித்திர வெளிச்சத்துக்கு வந்துவிட்ட போராளிகளாகிறார்கள். இது மக்களையே மாற்றி அமைக்கும் இயக்கம். ஆதிக்கத்திலிருந்து விடுபடும் ஒரு இயக்கம் புது மனிதனை உருவாக்குகிறது.

இளமையிலிருந்தே ஒடுக்கப்பட்டு வந்த மக்கள் சமூகம் தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க வன்முறை தவிர வழியில்லை என்று இளமையிலிருந்தே உணர்கிறார்கள்.

அடக்குமுறையாளர்கள் உலகை இரண்டு படுத்துகிறார்கள். தங்களுக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதி என வாழ்க்கை நலன்களைப் பிரித்து விடுகிறார்கள். இந்தப் பிரிவினையைக் கவனித்தால் தான் விடுதலைக்கான தேவை எப்படி உருப்பெறுகின்றன் என்று உணரலாம். இந்த வேறுபாட்டை பொலிஸும் இராணுவமும் பாதுகாக்கிறது. அவர்கள் இல்லாமல் இந்த கூறுபட்ட வாழ்க்கை முறை தாக்குப் பிடிக்காது. சுரண்டுகிறவனை சுரண்டப்படுகிறவனிட மிருந்து பொலிசும் இராணுவமுமே காப்பாற்றுகிறது. இதுவே அடக்குமுறைச் சமூக அமைப்பு. இது அமைதியை நிலை நாட்டும் அமைப்பாக சுரண்டப் படுகிறவனின் வீட்டினுள் வன்முறைக்கும் அமைதியின்மைக்கும் வழி செய்கிறது. ஆட்சியாளனை ஆளப்படுபவனுக்கு எதிரான துருவமாக்குகிறது. இதனால் இருவரிடையிலேயும் உடன்பாட்டுக்கு இடமே இல்லை.

அன்றாட வாழ்வில் வன்முறையை உபயோகித்து மக்களை அடக்கி வந்த அதே வன்முறை அடக்கப்




பட்டவர்களினால் விடுதலைப் போராக உருமாற்றமடைகிறது. அடக்குமுறையாளர்களால் சுரண்டப் படும் மக்கள் எவ்விதமான உயர்ந்த மதிப்பீடுகளையும் கொண்டவர்கள் அல்ல என்றும் மிருகங்கள் என்றும் சித்தரிக்கப்படுகிறார்கள். இந்த சித்தரிப்பு அடக்கப் பட்ட மனிதனுக்கு சிரிப்பூட்டும் சித்தரிப்பு. தங்களை மிருகங்களாகக் கருதி பிரயோகிக்கப்படுகிற அடக்குமுறையின் வன்முறையினை அவன் ஆட்சியாளன் மீதே திருப்பிவிடக் காத்திருக்கிறான்.

எனவே அடக்குமுறையாளர்கள் பேசும் சகோதரத்துவம் அவனது அன்றாட வாழ்வைப் பொறுத்த வரை அர்த்தமற்றது. அடக்குமுறையாளன் சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசினால் அடக்கப் பட்டவன் கத்தியை உருவுகிறான். பேச்சளவில் ஒன்றும் செய்கையில் வேறு ஒன்றுமாக அடக்குமுறையாளன் நடந்து கொள்வதே இதன் காரணம்.

வாழ்க்கைக்கான அடிப்படை உரிமைகளைப் பறிகொடுத்த மக்களின் ஒரே நோக்கம் தாம் பறி கொடுத்த நிலங்களைப் பெறுவதே; அவர்கள் தங்களிட மிருந்து அதைப் பறித்தவனுடன் சகோதரத்துவ உறவு கொண்டாடமாட்டார்கள். பறிக்கப்பட்ட நிலம் திரும்பப் பெறப்பட வேண்டும். இது தான் அடக்கப் பட்டவனது ஒரே நோக்கம். இதை உணராமல் சமாதானம் பற்றிப் பேசும் அறிவு வாதம் அர்த்த மற்றது.

சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள் பெயர் பெற்றவர்களாகவும், நிலத்தைப் பறி கொடுத்த மக்கள் சாமான்யர்களாகவும் இருக்கலாம். ஆனால் இந்த முகம் தெரியாத மக்கள் இழந்த நிலம் என்ற இறைமை அவர்களை வன்முறை என்ற முகாமுக்கு இட்டுச் செல்கிறது. இதனால் சரித்திரம் அவர்களுக்கு ஒரு முகத்தைக் கொடுக்கிறது. வன்முறை என்ற மதிப் பீட்டை வலுவிழக்க வைத்து மக்களைப் பொதி மாடுகளாக்குகிற மதிப்பீடுகள் தூள்களாகின்றன. அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் நேரில் காண்பது எதை? அவர்களை எளிதாக கைது செய்யலாம். கொல்லலாம், சீர்குலைக்கலாம் என்பதைத்தான். சமாதானவாதிகள் எவரும் அவர்களுக்காக இவற்றை அனுபவிப்பதில்லை. இந்த அநுபவங்களை மக்கள் சகித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் சமாதானவாதிகளின் போதனையாகும்.

'எல்லா மனிதர்களும் சமமானவர்கள்' என்ற போதனையைத் தான் வன்முறையினைக் கைக்கொள்ளும் மக்கள் பிரயோகப்படுத்துகிறார்கள். தங்களை அடக்கி யாள்கிறவர்களும் தாங்களும் சமமானவர்கள் என்றால் அடக்கப்பட்ட நிலையிலேயே அவர்கள் இருக்க முடியாது. எனவே வெளிப்படையான ஒரு போலிக் கட்டுப்பாடு தான் வன்முறையினால் சிதறடிக்கப் படுகிறது.

நிலமும், உணவும் தேவை என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு அவை கிடைப்பதற்கான வழிமுறைகளைக் கொண்டு வருவது தான் அறிவு ஜீவிகளின் சித்தாந்தமாக வேண்டும். மக்களுக்கு இவை கிடைக்காமல் தடையிடுகிற எதுவுமே தாக்குப் பிடிக்காது. இதை வெகு சீக்கிரத்திலேயே அடக்கப்பட்ட மக்களினுள் இருக்கிற அறிவுவாதிகள் உணர்ந்து கொள்கிறார்கள்.

அடக்கப்பட்டவன் எப்போதுமே அடக்குமுறையாளனால் குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டிருப்பான். ஆனால் தான் குற்றவாளியல்ல என்பது அடக்கப்பட்டவனுக்குத் தெரியும். அவன் தரம் குறைந்தவனுமல்ல. அவன் மீது ஆதிக்கம் சுமத்தப்பட்டிருக்கிறது என்பது தான் உண்மை. பொலிஸ், இராணுவம் ஆகியவற்றின் கெடுபிடிகள் அவனை அடக்குகிற அதே சமயத்தில் உள்ளூர அவனை வன்முறைக்கும் தயார்படுத்துகின்றன. ''அசையாதே'' என்ற கட்டளை ''தாக்கு'' என்ற தூண்டுதலாக உருமாறுகிறது. அடக்கப்பட்டவனை விழிப்படைய வைத்து வன்முறைக்கான தயார் நிலையை உருவாக்குகிறது. இறுதிப் போராட்டத்தை ஒத்திப் போட முடியாது என்ற நிலை எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் தடையே தடையினை மீறுவதற்குத் தூண்டுகோலாகும் என்பது விதி.

புராண மயக்கம் என்பது செயலற்ற நிலையல்ல. அத்தகைய மயக்கம் அடக்குமுறையாளர்களுக்கு ஆபத்தானதாகும். ஏனெனில் புராணங்கள் கற்பிக்கும் சக்திகளை நம்புகிற மக்கள் அதிதீவிரமான செயல்முறைகளைக் கருக்கொண்டு பிறப்பித்து விடுகிறார்கள் என்பது தெரிய வந்த சரித்திர விபரம். தியாகங்களையும் அற்புதப் போர் முறைகளையும் சித்தரிக்கும் புராணங்களைப் பயின்ற மக்கள், தங்கள் உற்றாருக்காகப் போராடவும், கணவனில்லாத இடத்தில் பெண்ணே அவனது வேலையினைச் செய்யவும் பயின்றவர்களாவர். இதற்கான சாட்சியங்கள் உள்ளன.

அடக்குமுறையாளர்கள், இந்த புராண மனோ பாவத்தின்படி அரக்கர்களை விடக் கொடுமையானவர்கள். இந்த மனோபாவம் விடுதலைப் போருக்கு அடிப்படையான தற்பெருமையை அடக்கப்பட்டவர்களுக்கு அளிக்கிறது. இருந்தும் நேருக்கு நேராக விரோதியைச் சந்திக்கும் போது நிலைமை வேறு வகையானது. அடக்குமுறையாளனுடன் மோதியாக

## தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாக உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் நடத்திய ஊர்வலங்கள்.


மேற்கு ஜேர்மனி,



இங்கிலாந்து,



இந்தியா.


ஸ்விட்சர்லாந்து,


பிரான்ஸ்.



# வன்செயலும்



வேண்டிய இளைய தலைமுறையினர் நேற்றைய புராணங்களை எள்ளி நகையாடுவர். இன்று உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டிய போராட்டம் தான் அவர்களுடைய குறிக்கோள். இதன் வழியில் நேற்றைய பெருமையுணர்வு இன்றைய செயல்பாட்டுக்கான அத்திவாரமாகிறது.

தேர்தல் முறைமூலம் "கொஞ்சம் கொஞ்சமாக" விடுதலையைப் பெறலாம் என்ற கொள்கையில் பிறப்பது தேசிய சந்தர்ப்பவாதிகளினால் உருவாக்கப்படுகிற கட்சி அரசியல் ஆகும். இவர்கள் பேசும் விடுதலைப் போர் வெறும் வார்த்தை ஜாலம் தான். இவர்களது நோக்கம் அடக்குமுறையாளர்களிடமிருந்து தங்களுடைய வர்க்கத்துக்கான நலன்களை அடைவது மட்டுமே. மக்களின் திக்கற்றியான நிலையை இவர்கள் கட்சி அரசியலாக மாற்றி அமைக்கிறார்கள். ஆனால் மக்களின் கேந்திரத்திலிருந்து போராட்டம் உருவாகிய உடனே இவர்கள் ஆட்சியாளர்களிடம் ஓடுவர். "நிலைமை அத்துமீறி விடப் போகிறது. ஏதாவது செய்ய வேண்டும்" என்பர். அதே சமயத்தில் விடுதலைப் போராளிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களது கேந்திரத்திலும் ஒரு காலை ஊன்றிக் கொள்ள முயற்சி செய்வர். இந்த வர்க்கத்தினருக்கு உண்மையில் புரட்சியின் அன்றாட வடிவான வன்முறை அலர்ஜியாகும். சுயலாபத்திற்காக கௌரவத்தையும் பலத்தையும் இழந்து நிற்பவர்கள் இவர்கள். ஆனால் விடுதலை இயக்கத்தின் தலைமை வரை சந்தர்ப்பவாதத்தால் ஊடுருவதற்கு இவர்கள் முயல்வர்.

பெரும்பாலும் இவர்களே தலைமையைப் பெற்று விட்டால் விடுதலையே அர்த்தமற்றதாகிவிடவும் இடமுண்டு. பழைய அடக்குமுறையாளர்களுடன் இவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு பழைய சுரண்டலுக்கு நவீன வசதிகளை இவர்கள் செய்து விடுகிறார்கள். இத்தகைய தலைவர்கள் "தொழிலாளர்களின் அரசு" என்ற ஒரு சுலோகத்தை இதற்கு போர்வையாக்கக்கூடும். ஆனால் "தேசிய அரசு" என்ற பிரக்ஞையின் மூலமே இவர்கள் கணிக்கப்பட வேண்டும். விவசாயிகளை இத்தகைய தலைவர்கள் திட்டமிட்டுப் புறக்கணிப்பர். ஆனால் ஒரு தேசிய எழுச்சி விவசாயிகளிடமிருந்தும், தங்கள் நில உடைமையை இழந்தவர்களிடமிருந்துமே பிறக்கிறது அவர்கள் வன்முறையைக் கண்டு பின்னடைவதில்லை. எல்லாவற்றையும் இழந்து நிற்கும் அவர்கள் வன்முறையைக் கையாள்வதால் இனி இழக்க எதுவுமில்லை.

காலனி ஆதிக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று கூறும் கட்சிகளுக்கு அந்த ஆதிக்கம் அறிவுபூர்வமான ஒன்றல்ல என்பது பற்றி கவலையில்லை. ஒடுக்குமுறை ஆதிக்கம் என்பது வெறும் உயிரற்ற, சிந்தனையற்ற இயந்திரம் அது வன்முறையை மட்டுமே உணரும். பேச்சு வார்த்தைகளை அல்ல. எப்போது தனது வன்முறையை விடத் தீவிரமான வன்முறை ஒன்று தன்னை எதிர்க்கிறதோ அப்போது மட்டுமே அது பின்னடையும். இந்நிலையில் அது தேசியக் கட்சிகளின் உதவியை நாடுகிறது. அப்போது தான் பேச்சு வார்த்தை பற்றிய பிரஸ்தாபம் எழுப்பப்படுகிறது. இது வன்முறையின் முக்கியத்துவத்தையே வலியுறுத்தும். இதை உணர்கிற போராளி உடன்படிக்கை மூலம் ஆதிக்க இயந்திரத்தைப் பாதுகாக்கிற பேச்சு வார்த்தைக்கு இணங்க மாட்டான்.

அரசியல்வாதி இந்தக் கட்டத்தில் தான் ஆதிக்கவாதிகளின் பக்கத்திலிருந்து குட்டிக்கரணம் போட்டு போராளிகளின் பக்கம் வரவேண்டியதாகிறது. இதைத் தவிர அவனுக்கு வேறுவழியில்லை.

அடக்குமுறையாளர்களுக்கு எதிராக வன்முறை பயன் தராது என்று கூறுகிற சித்தாந்திகள் இருக்கிறார்கள். வன்முறை தற்கொலையாகும் என்பது இவர்களது கருத்து. அடக்குமுறைச் சக்திகளை விட அதிகமாகவும் தரமாகவும் ஆயுதங்கள் இல்லாமல் வன்முறையைக் கையாள முடியாது என்பதே இவர்களது அடிப்படை.

ஆனால் கெரில்லா யுத்த முறை ஒன்று இருக்கிறது என்பதோ அதன் சாத்தியக்கூறுகளோ இவர்களுக்குப் புலனாவதில்லை. மிக அதிக ஆள்பலத்துடனும், ஆயுத பலத்துடனும் ஸ்பெயினுள் நுழைந்த நெப்போலியனை ஸ்பானியர்கள் விரட்டிய சரித்திரம் இருக்கிறது. அமெரிக்காவின் விடுதலைப் போராளிகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக *1790* வாக்கில் உபயோகித்த அதே கெரில்லா யுத்த முறையை ஸ்பானிய தேசியப் போராளிகள் *1810*ல் நெப்போலியனது பயங்கரமான சக்திமிகுந்த ராணுவத்துக்கு எதிராக உபயோகித்தார்கள்.

இதுமட்டுமல்ல வெறும் கெரில்லா முறை போதாது. அதன் சமகாலப் பின்னணியையும் இன்று கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சர்வ தேசப் பின்னணி என்ன என்பதை உணர்ந்தே கெரில்லா இயக்கங்கள் நடக்கின்றன.

தேசிய விடுதலையை நாடும் அரசியல்வாதிகள் ஒருபுறம் தங்கள் பேச்சுக்கள் மூலம் மக்களின் கனவுக்கு உருவம் கொடுத்து அவர்களுக்கும் அவர்களது தேசத்துக்கும் அடையாளம் உருவாக்குகிறார்கள்.




மறுபுறம் அடக்குமுறையாளர்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் கூட போராட்ட வீரர்களாக மக்களால் சித்தரிக்கப் படுகிறார்கள். இவர்களை மக்கள் போராட்ட வீரர்களாகக் கணிப்பது அடக்குமுறையாளர்களுக்கு எதிராக வன்முறையை அவர்கள் பிரயோகித்ததுக்காகவே.

அடக்கப்பட்ட மக்கள் தங்களைத் தனியர்களாக உணர்வதில்லை. உலகின் இதர பகுதிகளில் வன்முறைப் புரட்சிகள் நடப்பதை அவர்கள் செய்திகளாகக் கேட்கிறார்கள். இது தங்களுக்கு உலகெங்கும் சகோதரர்கள் உள்ளனர் என்று உணர்த்துகிறது. இது வன்முறைப் புரட்சிக்கு சர்வதேசப் பின்னணி ஆகிறது.

வன்முறை ஒரு புரட்சியாக உருமாறுவது எப்படி? இது மக்களின் அரசியல் அபிலாசை மூலமே நிகழ்கிறது. நேரடியாக மக்கள் தங்களை ஆயுதவாதிகளாக இயக்கரீதியில் தகுதிப்படுத்துகிறார்கள். இது இயற்கையாகவே பரந்துபட்டு நடக்கிறது. இந்நிலையில் தங்களுக்குச் சார்பான சூழல் மாறுபடுகிறது என்பதை ஆட்சியாளன் உணர்கிறான். பெருவாரியாக ஆயுதங்களையும் இராணுவத்தையும் குவிக்கிறான். விமான அணிவகுப்புகளை நடத்துகிறான். போராளிகள் இதையெல்லாம் கண்டு பயப்படுவதில்லை. இதற்கு மாறாக அவர்களது நரம்புகள் புடைக்கின்றன. தாக்குவதற்கே அவர்கள் தயாராகிறார்கள். எங்கோ நடக்கிற ஒரு சிறு நிகழ்ச்சி திடீரென நாடெங்கும் எரிமலையாக வெடித்தெழுகிறது.

எப்போது அடக்குமுறையாளர்கள் படுகொலைகள் மூலம் தங்களை நிறுவ முன்வந்தார்களோ அப்போதே வன்முறைக்கு அவர்கள் வழிவகுத்துவிடுகிறார்கள். பலாத்காரத்தின் மூலம் மட்டுமே தீர்வு என்பது அடக்குமுறையாளர்களின் இயக்கத்திலிருந்து தொடர்கிற ஒன்று தான்.

போராட்டத் தலைவர்களைக் கைது செய்வதென்பது மிகவும் ஆபத்தானது என்பதை இன்று காலனி அரசுகள் கற்றுவிட்டன. எப்போது தங்கள் தலைவர்கள் கைதாகின்றனரோ உடனேயே மக்கள் கட்டுப் பாட்டினை இழக்கின்றனர். கண்மூடித்தனமான கொலைகளை நடத்துகின்றனர். தலைவர்களை விடுவிக்க வேண்டிய கட்டாயமும், மக்களைக் காப்பாற்றத் தலைவர்கள் கட்டுப்பட வேண்டிய அவசியமும் இதிலிருந்து பிறக்கின்றன.

தேசியத் தலைவர்களை விடுதலை செய்யும்படி வற்புறுத்தப்பட்டு அதற்கு அடிபணிந்த உடனேயே அவர்களை மதித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படுகிறது.

சமகால உலக நிலையை தேசிய விடுதலைப் போராளி தனக்குச் சாதகமாக்கிக் கொள்வது பற்றி முடிவாக சில வார்த்தைகள். காலனி ஆதிக்கங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக நடக்கும் போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகள் என சிலர் கூறுவர். இது உண்மையில் அடக்குமுறையாளனுக்கு கிலியைத் தருகிற கதையாகும். இந்தக் கிலியும் இதன் பின்னணியிலுள்ள சர்வதேச நிலையும் போராளிக்குச் சாதகமானவை. அவன் தனது சக்திகளைத் திரட்டிக் கொள்ளவும் உலக அபிப்பிராயத்தை தனதாக்கவும் இவை உதவுகின்றன.

சகலத்தையும் இழந்து பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் மக்கள் சமூகம் வன்முறையில் இறங்குகிறது என்றால் அது வியப்புக்குரியது என்று ஒரு கருத்து உண்டு. உண்மையில் இதில் வியப்புக்கு ஏதும் இல்லை. இனி இழக்க எதுவுமில்லை என்ற நிலையில் தான் மக்கள் வன்முறையினை மேற்கொள்கின்றனர்.

விடுதலைப் போரின் யதார்த்த பரிமாணம் வன்முறை தான். இந்தப் போரின் மூலம் தான் அடக்கப்பட்ட மக்கள் தங்கள் சுய கௌரவத்தைத் திரும்பிப் பெற முடியும். தேசிய உணர்வின் பெருமைப் பேச்சு இந்த சுய கௌரவத்தை சம்பாதித்துத் தந்துவிடப் போதுமான ஒன்றல்ல. தேசிய உணர்வின் செயல் வடிவமான வன்முறை மூலம் அடக்குமுறையாளர்களின் சிறகுகள் ஒடிக்கப்படும் போது தான் தேசிய உணர்வு விடுதலைப் போராக பரிணமிக்கிறது.



(மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றாகிய மாட்டினிக்கில் 1925ம் ஆண்டு பிறந்த பிரான்ஸ்பனன் 1951ல் இருந்து அல்ஜீரியாவில் வசித்து வந்தார். 1951ம் ஆண்டிலிருந்து அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்திற்காக உழைத்து வந்த அவர் 1961ம் ஆண்டில் தனது 36வது வயதில் இரத்தப் புற்றுநோயால் காலமானார். அவர் எழுதிய நூல்களில் wretched of the earth மிகவும் பிரபல்யமானது. இந்நூலிலுள்ள 'புரட்சிகர வன்முறை பற்றி' என்ற அத்தியாயத்திலிருந்து சில முக்கிய பகுதிகளை இங்கு தமிழாக்கம் செய்து தருகிறோம்.)





இந்தியா.








## மக்களின் சுதந்திரமும் இறைமையையும் பேச்சு வார்த்தைக்கான விஷய




1979—ம் ஆண்டு, ஜூலை 19—ந் தேதி, லத்தீன் அமெரிக்க கண்டத்தில் ஒரு வீர சுதந்திர வரலாறு படைக்கப்பட்ட தினம். அன்று தான் சான்டினிஸ்தா விடுதலை இயக்கத்தின் தலைமையில் நிகரகுவா மக்கள் சுதந்திரமடைந்து ஒரு புரட்சிகரமான ஆட்சியை நிறுவினர். அந்நிய அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து பல நூற்றாண்டு காலமாக நடைபெற்ற புரட்சிகர விடுதலைப் போராட்டம் இறுதியில் வெற்றி வாகை சூடிக் கொண்டது. உலகப் புரட்சியில் ஒரு புதிய அத்தியாயம் படைக்கப்பட்டது. நிகரகுவா மக்களின் வீர சுதந்திரப் போராட்டமும் அதன் இறுதி வெற்றியும், ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திர எழுச்சிகளுக்கு ஒரு உத்வேகத்தையும் புதிய நம்பிக்கையையும் பிறப்பித்தது. உறுதிபூண்ட ஒரு மக்கள் சமுதாயத்தை எந்தவொரு சக்தியாலும் நசுக்க முடியாது என்ற வரலாற்று உண்மைக்கு நிகரகுவா புரட்சி ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நிகரகுவா மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பல நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டது. 16ம், 17ம், 18ம் நூற்றாண்டுகளில் ஸ்பானிய காலனி ஆதிக்கத்திற்கு எதிராகவும் அதன்பின் 1855ம் ஆண்டிலிருந்து 100 வருடங்களுக்கு மேலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் இந்த சிறிய நாடு வீராவேசத்தோடு போராடி வந்தது. இறுதியாக அமெரிக்காவின் அடிவருடியான சாமோசாவின் சர்வாதிகார கொடுங்கோன்மை ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த நிகரகுவா மக்கள், அந்த அடக்குமுறை ஆட்சியை உடைத்தெறிந்து விடுதலையை வென்றெடுத்தனர். இந்த விடுதலைப் போரில் 50,000 மக்கள் வரை உயிர்த் தியாகம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு, தெற்கு அமெரிக்கக் கண்டங்களை இணைக்கும் குறுகிய நிலப்பிரதேசத்திற்குள் அமைந்திருக்கும் இச் சிறிய நாடு வடக்கில் ஹொண்டுராஸ் தெற்கில் கோஸ்தாரிக்கா ஆகிய தேசங்களை எல்லை நாடுகளாகக் கொண்டது. நிகரகுவா ஜனத்தொகை 25 லட்சம். தேசிய வருமானம் விவசாய பொருளாதாரத்தை சார்ந்திருக்கின்றது; பருத்தி, காப்பி, கரும்பு போன்ற காசுப்பயிர்கள், கால்நடைகள் இந் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### சர்வாதிகாரத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

1910 — 20 ஆண்டு காலத்தில் நிகரகுவா மக்களின் புரட்சிகர கிளர்ச்சியை எதிர்நோக்க வேண்டிய நேரடி அனுபவம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏற்பட்டது. இந்த சிறிய தேசத்தை தங்களின் நேரடி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் அமெரிக்கா அனுப்பி வைத்த கடற்படையினரை எதிர்த்து நிகரகுவா மக்கள் வீராவேசத்துடன் போரிட்டனர். அமெரிக்க கடற்படையினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. தனது சொந்த இராணுவ பலத்தால் நிகரகுவா மக்களை அடிமை கொள்ள முடியாது என உணர்ந்து கொண்ட அமெரிக்கா தனது யுத்த தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்டது. பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு நிகரகுவா மக்களின் ஒரு பிரிவினரைக் கொண்ட ''தேசிய பாதுகாப்புப் படை'' என்ற ஒரு சுதேசிய கூலிப் பட்டாளத்தை அமெரிக்கா உருவாக்கியது. அமெரிக்காவிடம் இருந்து இராணுவப் பயிற்சியையும், நவீன ஆயுதங்களையும் பெற்றுக் கொண்ட இந்த கூலிப் பட்டாளத்தின் தளபதியாக ''சாமோசா'' என்பவன் பதவி ஏற்றான்.

அமெரிக்காவின் கைப் பொம்மையாகிய இவன் காலகதியில் தனது சூழ்ச்சியால் நிகரகுவாவின் சர்வாதிகாரியாகப் பதவியேற்றான். இந்த சாமோசாவின் குடும்பமே அந்நாட்டை ஆளும் வர்க்கமாக மாறியது. ஆரம்பத்தில் சாதாரண ஏழ்மை நிலையில் இருந்த சாமோசா குடும்பத்தினர் நாளடைவில் அந்நாட்டின் மிகப் பெரிய செல்வந்தர்களாகவும், தொழில் அதிபர்களாகவும் மாறினர். அந்நாட்டின் அனைத்து தொழில் உற்பத்தி நிறுவனங்களும், நிலவளமும் சாமோசா குடும்பத்தினருக்கு சொந்தமாகியது. 500க்கு மேற்பட்ட கூட்டுத்தாபனங்களில் இவர்களது மூலதனங்கள் முடங்கிக் கிடந்தன. 1979ம் ஆண்டு சாமோசா ஆட்சி முறியடிக்கப்பட்ட போது 50 கோடி டொலர்கள் சாமோசா குடும்பத்தின் சொத்தாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தப் பெரும் செல்வம் அமெரிக்காவின் மூலதனத்தில் இருந்தே பெறப்பட்டது. அந்த அளவு அமெரிக்காவின் ஆதிக்கத்தின் மீதும், சுரண்டல் மீதும் சாமோசா குடும்பத்தினர் கண்மூடித்தனமாக விசுவாசம் வைத்திருந்தனர். சர்வாதிகாரி சமோசாவின் குடும்பம் நாட்டை குட்டிச் சுவராக்க ஆரம்பித்த காலத்தில் இருந்து பொதுமக்கள் தாங்கொணா துன்பத்துக்கு ஆளாகினார்கள். பசி, பட்டினி, பஞ்சம் நாட்டில் தாண்டவமாடியது.

மிகவும் மிருகத்தனமான ஒடுக்குமுறையும், இரக்கமற்ற சுரண்டல் முறையும் மக்களின் நாளாந்த வாழ்க்கையை நாசமாக்கியது.

### புரட்சிப் பாதையில் மக்கள்

அன்னிய ஆதிக்கத்துக்கெதிராக, நீண்ட காலமாகப் போராடிய வரலாற்று அனுபவம் காரணமாக, நிகரகுவா மக்கள் மத்தியில் சமத்துவம், சமநீதி, தேசிய சுயநிர்ணய உரிமை போன்ற புரட்சிகரக் கருத்துகள் வேரூன்றி இருந்தன. இந்தப் புரட்சிகர கருத்துக்கு இலக்கணமாக தோன்றிய விடுதலை வீரன் தான் ''சான்டினோ''. இவனது பெயரை அடிப்படையாகக் கொண்டுதான் இன்றைய தேசிய விடுதலை இயக்கம் உருப்பெற்றது. ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்த சான்டினோ சிறு பிராயத்திலிருந்தே தேசாபிமான உணர்வும், விடுதலை வேட்கையும் உடையவனாக விளங்கினான். 1927ம் ஆண்டு ஒரு தேசிய எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்த சான்டினோ அவ்வியக்கத்திற்கு ''தேசிய சுதந்திரப் பாதுகாப்பு இராணுவம்'' எனப் பெயரிட்டான். இவனது தேசிய சுதந்திர இராணுவத்தில் ஏழை விவசாயிகளும், தொழிலாளர்களும் அணி சேர்ந்துகொண்டனர்.


கெரில்லாப் போர் தந்திரோபாயங்களில் மிகவும் சாதுரியம் பெற்றவனாக விளங்கிய சான்டினோ 1933ம் ஆண்டு அமெரிக்க கடற்படையினரை எதிர்த்துப் போராடி பெரும் வெற்றியை ஈட்டினான். அமெரிக்க கடற்படையினரை விரட்டியடித்துவிட்டு நாட்டின் பல பிரதேசங்களை விடுவித்து அப்பகுதிகளில் புரட்சிகர நிர்வாக அமைப்புகளைத் தோற்றுவித்தான். இவனது நிர்வாக ஆட்சியின் கீழ் புரட்சிகரமான சமூக சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. கூட்டுறவு அடிப்படையில் விவசாய உற்பத்தி நெறிப்படுத்தப்பட்டது. ஏழை விவசாயிகளுக்கு புரட்சிகரக் கல்வி போதிக்கப்பட்டது. செல்வந்தர்கள்மீது வரி விதிக்கப்பட்டு ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஜனாதிபதியின் ஆட்சி ஒருபுறம் இருக்க சான்டினோ ஒரு புரட்சிகர அரசை உருவாக்கினான். இந்த ஆட்சி ''அரசாங்கத்தினுள் ஒரு அரசாங்கம்'' என வர்ணிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் தான் சாமோசா அமெரிக்காவின் உதவியுடன் ஒரு கூலிப் பட்டாளத்தை நிறுவி நாட்டின் சர்வாதிகாரியாக பதவி ஏற்றான். சாமோசா ஆட்சியை வீழ்த்தி முழு அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றுவதற்கு சான்டினோ விடுதலை இராணுவத்திடம் போதிய ஆட்பலமும், ஆயுதபலமும் இல்லை.


F.S.L.N. ராணுவத்தில் 30 % பெண்கள்

சான்டினோ ஆரம்பித்த தேசிய விடுதலைப் போராட்டம் தேசிய ரீதியிலோ, சர்வதேசரீதியிலோ ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. அக்காலகட்டத்தில் நிகரகுவா விவசாய சமூகம் அரசியல் விழிப்புணர்வு பெறவில்லை. அத்தோடு அவர்கள் அமைப்பு ரீதியாக அணி திரட்டப்படவில்லை. இதனால் சான்டினோவின் விடுதலை இயக்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒரு மக்கள் யுத்தமாக விரிவடையாமல் போயிற்று. சர்வாதிகாரி சாமோசா அழைத்த பேச்சு வார்த்தைக்கு சான்டினோ இணங்காது ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தினான். 1934ம் ஆண்டு பெப்ரவரி மாதம் சான்டினோ வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது சாமோசாவின் கூலிப்பட்டாளத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டார். சான்டினோ கொல்லப்பட்டதை அடுத்து சாமோசாவின் அரச கூலிப்படைகள் சான்டினோ விடுதலை இயக்கத்தின் தலைமைக் காரியாலயத்தை அழித்ததுடன் சான்டினோவின் ஆதரவாளர்கள் பலரை சுட்டுக் கொன்றனர். இதே நேரத்தில் ஒரு பயங்கரவாத ஆட்சி கட்டவிழ்த்து விடப்பட்டது. சான்டினோவின் அனுதாபிகளாக இருந்த வெகுஜனங்கள் ஆயிரக்கணக்கில் சுட்டுக் கொல்லப்பட்டனர். சான்டினோ கட்டி வளர்த்த சமூக தாபனங்கள் அழித்தொழிக்கப்பட்டன. சாமோசாவின் சர்வாதிகார ஆட்சி பொது மக்களை தனது இரும்புப் பிடிக்குள் கொண்டு வந்தது. சான்டினோவும், அவனது விடுதலை இராணுவமும் ஒழிக்கப்பட்டதை அடுத்து மக்கள் நம்பிக்கை இழந்தனர். சர்வாதிகார சக்தி மீண்டும் வலுப்பெற்றது. சுரண்டலும், அடக்கு முறையும் மீண்டும் வெறியாட்டம் ஆடத் தொடங்கின. இந்த நிலைமை 1961 வரை நீடித்தது.

### சான்டினிஸ்டா விடுதலை இயக்கம்

1961ம் ஆண்டு மாவீரன் சான்டினோவின் பெயரில் ''சான்டனிஸ்டா தேசிய விடுதலை இயக்கம்'' ஆரம்பிக்கப்பட்டது. சான்டினோவின் வீர வரலாறு மட்டுமின்றி 1959ம் ஆண்டு வெற்றியீட்டிய கியூபப் புரட்சியும் இந்த விடுதலை இயக்கத்துக்கு ஒரு புத்தெழுச்சியைக் கொடுத்தது. சான்டினிஸ்டா விடுதலை இயக்கம்


தூர்ந்துபோன குளங்களை திருத்தும் பணியில் இளம் விடுதலைப் புலிகள்.


விடுதலைப் புலிகளாக இளைஞர்கள் மட்டுமன்றி சிறுவர்களும்...


பொதுமக்களுக்கு தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி புலிகளால் நடத்தப்படும் வகுப்புக்கள்.





...ங்களில்லை; ஆயுதங்களால் பாதுகாக்கப்பட வேண்டியவை-சாண்டினோ

கெரில்லாப் போர் முறை மூலமே தேசிய விடுதலையை வென்றெடுக்க உறுதி பூண்டது. ஆரம்பத்தில் கெரில்லா அணியாக இருந்த விடுதலை இயக்கம் நிகரகுவாவின் வட எல்லைப் பிரதேச மலைப் பகுதிகளிலும், பள்ளத் தாக்குகளிலும் தனது போர் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. ஆரம்பக் கால கட்டத்தில் கெரில்லாப் போர் நடவடிக்கைகள் பெரும் வெற்றியளிக்காத போதும் காலப் போக்கில் படிப்படியாக ஆயுதப் போராட்டம் மக்கள் மத்தியில் நிலைபெறத் தொடங்கியது. காலப்போக்கில் விடுதலை இயக்கம் கிராமங்களிலும், நகரங்களிலும், விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள் மத்தியிலும் செல்வாக்கைப் பெற்று விரிவடையத் தொடங்கியது.

தேசிய விடுதலையையும், சமுதாயப் புரட்சியையும் இலட்சியமாகக் கொண்டு தமது உயிரையும் பொருட்படுத்தாமல் பல தியாகங்கள் புரிந்து வந்த இந்த விடுதலை இயக்கம் வெகு ஜனங்கள் மத்தியில் நம்பிக்கையும், நல்லெண்ணத்தையும், மதிப்பையும் பெற்றது.

1978ம் ஆண்டு ஜனவரி மாதம் பிரபல பத்திரிகையாளரான "பீற்றோ சமோரோ" அரச படைகளால் கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் மக்கள் மத்தியில் ஒரு பெரும் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது. இந்தப் படுகொலையைக் கண்டித்து ஆயிரம் ஆயிரம் மக்கள் கண்டன ஊர்வலங்களை நடத்தினார்கள். இந்த மக்கள் கிளர்ச்சி மசாயா நகரத்தில் ஒரு பெரிய புரட்சியாக வெடித்தது. இந்நகரத்தில் நடைபெற்ற ஒரு மாபெரும் கண்டனக் கூட்டத்தை கலைப்பதற்கு அரசபடைகள் முயற்சித்த போது பெரிய கலவரம் ஏற்பட்டது. அரச படைகளை எதிர்த்து மக்கள் போரிட்டனர். இந்த மக்கள் போராட்டம் இரண்டு வாரங்களாக தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் அரசபடை ஆகாயத்தில் இருந்து குண்டுகளைப் பொழிந்து பெருந் தொகையில் மக்களைக் கொன்று கிளர்ச்சியை நசுக்கியது.

## கெரில்லா வீரர்கள் சாதனை

சில மாதங்களின் பின் 1978 ஆகஸ்ட்டில் சான்டினிஸ்டா கெரில்லா வீரர்கள் வீரசாதனை ஒன்றை நிலை நாட்டினர். 25 இளம் சான்டினிஸ்டா கெரில்லா வீரர்கள் மின்னல்வேகத் தாக்குதலில் தேசிய மாளிகையைக் கைப்பற்றினர். தேசிய மாளிகையில் இருந்த 60 அரசாங்க அதிகாரிகளை பணயக் கைதிகளாக்கிய கெரில்லா வீரர்கள் அவர்களை விடுவிப்பதற்காக சில கோரிக்கைகளை முன்வைத்தனர். 80 அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்றும், 1 கோடி டொலர் பணயமாகத் தர வேண்டும் என்றும், தேசிய மாளிகையை கைப்பற்றிய கெரில்லா வீரர்கள் நாட்டை விட்டு பத்திரமாக வெளியேற ஏற்பாடு செய்து தர வேண்டுமென்றும், விடுதலை இயக்கத்தின் புரட்சிகர அரசியல் திட்டம் தேசிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. வேறு வழியின்றி சர்வாதிகாரி சாமோசா இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்கினான். 45 மணி நேரத்திற்குப் பின்னர் கெரில்லாக்களும், பணயக் கைதிகள் சிலரும் பேருந்துகளில் விமான நிலையத்துக்கு சென்றனர். வீதியெங்கும் திரளாக கூடியிருந்த மக்கள் கூட்டம் புரட்சியாளருக்கு ஆதரவாக கோஷமிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர். இந்த சாதனை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றதுடன் ஆட்சியாளர்களை ஆட்டம் காணச் செய்தது.

## மக்கள் எழுச்சி

1978ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சான்டினிஸ்டா தேசிய விடுதலை இயக்கம் நாடு தழுவிய கிளர்ச்சியொன்றை ஏற்பாடு செய்தது. நாடெங்கிலும், நகரங்கள், கிராமங்கள் முழுவதும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கெரில்லா வீரர்களுடன் சேர்ந்து அரச படைகளை எதிர்த்து மூர்க்கத்தனமாகப் போரிட்டனர். ஒரு பெரிய வெகுஜன யுத்தமாக இது வெடித்தது. சாமோசா அரசாங்கம் படு பயங்கரமான முறையில் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. காட்டுமிராண்டித்தனமாக பல்லாயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். தரைப்படையினருடன் சேர்ந்து விமானப் படையினரும் சரமாரியாக குண்டுகளைப் பொழிந்து வீடுகள், தொழிற்சாலைகள், பள்ளிக்கூடங்கள் முதலிய பொது ஸ்தாபனங்களை அழித்து மக்களுக்குப் பேரழிவை விளைவித்தனர். இந்த வெகுஜனக் கிளர்ச்சி தற்காலிகமாக நசுக்கப்பட்ட போதிலும் மக்களிடம் விடுதலை



வெற்றி கொண்ட புரட்சியாளர்கள் தலைநகருக்குள் நுழைகின்றனர்.

வேட்கை தணிந்து போகவில்லை. 1979 மே மாதம் நடைபெற்ற மக்கள் போராட்டமே சர்வாதிகாரத்துக்கு எதிராக நடந்த இறுதி யுத்தம் எனக் கொள்ளலாம்.

சான்டினிஸ்டா விடுதலை இயக்கத்தின் கோரிக்கையின் பெயரில் மக்கள் மீண்டும் கிளர்ந்து எழுந்தனர். நாடு தழுவிய பொதுவேலைநிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலை நிறுத்தம் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்தது. இந்த வேலை நிறுத்தம் இறுதியில் ஒரு வெகுஜன யுத்தமாகக் குமுறியது. கெரில்லா அணிகளுடன் சேர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அரசபடைகளை எதிர்த்துப் போரிட்டனர். முக்கியமான இடங்களும் நகரங்களும் கெரில்லாக்கள் வசம் வீழ்ந்தன.

வெகுஜன ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாது அரச கூலிப் பட்டாளங்கள் சிதறி ஓடின. 1979 ஜூலை 17ம் திகதி கொடுங்கோலன் சாமோசா நாட்டைவிட்டு ஓடி அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தான். ஜூலை 19ம் திகதி வெற்றிவாகை சூடிய கெரில்லா அணிகள் நாட்டின் தலைநகரமாகிய மனகுவாவிற்குள் பிரவேசித்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றின.

## புரட்சிகர அரசும் எதிர்ப்புரட்சிச் சக்திகளும்

சாமோசாவின் சர்வாதிகார ஆட்சியைத் தோற்கடித்த சான்டினிஸ்டா விடுதலை இயக்கம் புரட்சிகர மக்கள் ஆட்சியொன்றை நிறுவியது. புரட்சிகரமான சமூக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. சாமோசாவின் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டு மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும்வகையில் புதிய தொழிலாளர் சங்க அமைப்புகள் உருவாக்கப்பட்டன. புதிய வீடமைப்புத் திட்டங்கள், புரட்சிகர கல்வித் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. சான்டினிஸ்டா அரசு சமூக பொருளாதார புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுவந்தது.

நிகரகுவா புரட்சி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு ஒரு பேரிடியாக விழுந்தது. லத்தின் அமெரிக்க கண்டத்தின் புரட்சித் தீ பரவி தேசிய விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்து தனது பொருளாதார அரசியல் ஆதிபத்தியத்துக்கு சவாலாக அமையலாம் என பயந்தது. தனது ஏகாதிபத்திய நலன்களை நிலைநாட்டும் நோக்கில் நிகரகுவா மக்களின் புரட்சிகர அரசை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா திட்டம் தீட்டியது. இதன் அடிப்படையில் மூன்று அம்சமான (சித்தாந்த, இராணுவ, பொருளாதார) எதிர்ப் புரட்சித்திட்ட மொன்றை நிகரகுவாவுக்குளெதிராக அமெரிக்கா செயல்படுத்தத் தொடங்கியது.



சாண்டினோ.




தற்போதைய தலைவர் டேனியல் ஆர்டேகா.

நிகரகுவா அரசானது ஒற்றைக் கட்சியான சர்வாதிகார கம்யூனிச அரசு என்றும், மக்கள் உரிமைகளை நசுக்கி வருகிறதென்றும் அமெரிக்கா பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டது. இந்த விஷமப் பிரச்சாரம் சர்வதேச சமூகத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. நிகரகுவா அரசானது மக்கள் ஆதரவைப் பெற்ற மக்கள் அரசு என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரித்திருக்கிறது.

இராணுவரீதியில் நிகரகுவா அரசை கவிழ்த்து விடுவதற்கும் அமெரிக்கா சூழ்ச்சி செய்தது. சாமோசாவின் ஆதரவாளர்களான எதிர்ப்புரட்சி சக்திகளை அரவணைத்து அவர்களுக்கு பயிற்சி அளித்து ஆயுதம் அளித்து நிதி உதவி செய்து நிகரகுவா அரசுக்கெதிராக ஏவி விட்டது. இவர்களில் பலர் சாமோசாவின் கூலிப்பட்டாளத்திலும் இருந்தவர்கள். எல்லை நாடுகளில், குறிப்பாக கொண்டுராஸ் நாட்டில் தளங்களை அமைத்து இந்த எதிர்ப்புரட்சிப் படையினர் நிகரகுவாவுக்குள் ஊடுருவி உயிரழிவும், பொருளழிவுமாக பெரும் சேதத்தை விளைவித்து வந்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இச்சதி நடவடிக்கை நிகரகுவா மக்களை என்றுமில்லாதபடி ஒரே அணியில் ஒன்று திரட்டியது. நாட்டுக்குள் புகுந்து எதிரிப் படைகளை விரட்டியடிப்பதில் இராணுவத்தினருடன் சேர்ந்து பொது மக்களும் பக்கபலமாக உதவினர்.* இறுதியில் எதிரிப்படைகள் பின்வாங்கின.

தனது இராணுவ ஊடுருவல்கள் தோல்வி அடைந்ததால் பொருளாதார முடக்கலை ஏற்படுத்தி நிகரகுவா மக்களை அடிபணியச் செய்ய அமெரிக்க ஏகாதிபத்திய அரசு முயன்றது. இதன்படி 85 மே மாதம் ரீகன் அரசாங்கம் நிகரகுவா மீது பொருளாதார தடைகளை விதித்தது. இரு நாடுகள் மத்தியிலான வர்த்தக உறவுகளை துண்டித்தது மட்டுமல்லாது உணவுத் தானியமாகிய கோதுமை ஏற்றுமதியை அமெரிக்கா நிறுத்தியது. இந்தப் பொருளாதாரத் தடைகள் நிகரகுவா மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய போதும் மக்கள் உறுதி தளராது புரட்சிப் பாதையில் வீறு நடை போட்டு வருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நாசகாரத் திட்டங்களை எதிர்த்து நின்று போராடிய நிகரகுவா மக்களுக்கு உலக சமுதாயம் மத்தியில் பெரும் ஆதரவு திரண்டு வருகிறது.







← —
புலிகளால் உற்பத்திப் செய்யப்படும் உள்ளூர் பொருட்களைக் கொண்ட நியாய விலைக் கடைகள்.







தமிழீழ மக்களின் நல்வாழ்வுக்காக புலிகளின் பிரச்சாரம்.

# பேச்சுவார்த்தை




பேச்சுவார்த்தையை எதிர்த்து தமிழீழத்தில் நடந்த ஊர்வலங்கள்.



இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு வல்லரசாக விளங்குகிறது. அவ்வாறு தொடர்ந்து தனது வல்லாண்மையை நிலை நாட்டுவதற்கு இந்தியா சகல முயற்சிகளையும் செய்யும் என்பது கண்கூடு. எனவே தனது நலன்கள் பாதிக்கப்படுவதையோ, தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதையோ, ஏனைய வல்லரசுகள் இப்பிராந்தியத்துக்குள் ஆதிக்கம் செலுத்த முனைவதையோ இந்தியா சகிக்கப் போவதில்லை. இயகோகாசியா தளத்திற்கு அடுத்தபடியாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் சிறந்ததொரு கப்பற்படைத்தளமாக அமையக் கூடிய திருகோணமலைத் துறை முகத்தில் பலவாண்டு காலமாக அமெரிக்கா கண்வைத்திருப்பது அனைவரும் அறிந்த விடயமே. தன்னைச் சூழ அமெரிக்க சார்பு நாடுகள் அமைவதை இந்தியா விரும்பாதது மட்டுமல்ல, இதுவரை காலமும் பாதுகாப்பாக இருந்த இந்தியாவின் தென் பிரதேசத்திற்கு அச்சுறுத்தலாக அமெரிக்கா நேரடியாக இலங்கையில் தளம் அமைப்பதையோ, ஊடுருவுவதையோ, ஆதிக்கம் பெறுவதையோ இந்தியா பொறுத்துக் கொள்ளாது.

தன்னைச் சூழவுள்ள அயல் நாடுகள் தனது பாதுகாப்புக்கு குந்தகமாக அமையாதவாறு பார்த்துக் கொள்வது இந்தியாவின் பிரதான தந்திரோபாயமாக விளங்குகிறது. சர்வதேசக் கண்ணோட்டத்தில், புவியியல், அரசியல் ரீதியான நிலைப்பாட்டில் இந்தியாவை நோக்கினால் இந்தியாவின் நலன், அதன் வல்லரசுத் தலைமை ஆகியவற்றைப் பேணுவதின் அடிப்படையிலேயே அதன் வெளிநாட்டுக் கொள்கை அமைந்துள்ளது எனலாம்.



**மக்கள்! மக்கள்!**
**மக்களுக்காகவே போராட்டம்**
**மக்களாலேயே போராட்டம்**
**மக்களின்றிப் போராட்டம்**
**இல்லை எனுமாறு**
**அவர்களது எழுச்சி**
**அமைந்திருந்தது**

தமிழீழம் அமைவதற்கு இந்தியா இடம் கொடாது என பல தடவைகளில் பகிரங்கமாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கைத் தமிழ் மக்கள் சம உரிமைகளுடன் சமத்துவமாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டுமென்று இந்தியா எண்ணுகிறது. தமிழீழ மக்கள் அடக்குமுறைக்கும், இனப்படுகொலைக்கும் உட்படக் கூடாது என்று விரும்புகிறது. இன, மொழி, கலாச்சாரப் பிணைப்புகளால் ஒன்றிணைக்கப்பட்டவர்களாக . இலங்கைத் தமிழ் மக்களும் தமிழக மக்களும் இருப்பது ஒரு முக்கிய அம்சமாகும். இலங்கையில் தமிழருக்கு எதிராக நடைபெறும் சிங்கள இனவாத அரசின் கொடூரச் செயல்கள், அடக்குமுறைச் சம்பவங்கள் தமிழகத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றன. தமிழக மக்கள் வேதனை அடைகிறார்கள்; ஆத்திரமுறுகிறார்கள்; தமது ஆதரவைத் தெரிவிக்க தீக்குளிக்கிறார்கள்; ஊர்வலங்கள் நடாத்துகிறார்கள்; மேடைகளில் முழங்குகிறார்கள்; உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இத்தகைய அஹிம்சை முறையான உணர்ச்சி வெளிப்பாடுகள், போராட்டங்கள் உரிய பலனைத் தராவிட்டால் தொடர்ந்து தமிழீழ மக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டு இருந்தால் மத்திய அரசின் மீது தமிழக மக்கள் சந்தேகம் கொள்ளத் தொடங்கி விடுவார்கள். இச் சந்தேகம் வன் செயல்களுக்கு இட்டுச் சென்றுவிடுமோ என்று மத்திய அரசு கவலைப்படுவது இயற்கையே! ஒரு இலட்சத்துக்கும் மேலான தமிழீழ அகதிகள் இந்திய மண்ணில் தஞ்சம் புகுந்திருப்பதும், தொடர்ந்து வந்து கொண்டிருப்பதும் இந்தியாவுக்கு சமூக, அரசியல், பொருளாதார பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான காரணங்கள் தமிழ் தேசியப் பிரச்சினையை விரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்தியாவைத் தூண்டிவிட்டுள்ளன.

எமது ஆயுதப் போராட்டம் சிறீலங்கா அரசைப் பலவீனப்படுத்தியது. எமது தாக்குதல்களினால் சிங்கள அரசு ஆட்டம் கண்டது. சிறீலங்கா அரசு இந்தியாவின் நலன்களுக்கு எதிராகச் செயல்படும் சக்தியாக விளங்குவதற்கு தடையாக நாம் இருந்தோம். சிங்கள அரசு மேலும் பலவீனமடைந்து ஸ்திரநிலை குலைந்து விட்டால் அது அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் ஊடுருவலுக்கு வழி வகுத்து விடும் என்று இந்திய அரசு வட்டாரங்கள் கருதி இருக்கலாம். இஸ்ரேவல், தென்னாபிரிக்கா போன்ற கைப்பொம்மை நாடுகள் மூலம் சிறீலங்காவுக்கு உதவியளித்து வந்த அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டு விடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கலாம். எனவே இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் புதிய தொரு அணுகு முறையைக் கடைப்பிடிக்க இந்தியா தீர்மானித்தது போலும். அதன் அடிப்படையிலேயே இந்தச் சமாதான தீர்வுக்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகின. பேச்சுவார்த்தை மூலமாக பல்லாண்டு காலமாக இழுபட்டு வந்த இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடலாம் என்று இந்தியா நம்பியது. இரு பகுதியினருக்கும் அழுத்தம் போடுவதன் மூலம் இதனைச் சாதிக்கலாம் என்று நினைக்கிறது. எம்மைத் தமிழீழக் கோரிக்கையிலிருந்து இறங்கச் செய்து சிறிலங்கா அரசை இந்தியாவிலுள்ள சமஷ்டி அமைப்பைப் போன்ற (Quasi Federal) திட்டத்திற்கு ஏறச் செய்து எமது பிரச்சினையை ஒருவாறு தீர்த்து வைக்க முயல்கிறது. பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டி இந்தியா யுத்த நிறுத்தத்திற்கு ஒழுங்கு செய்தது.

இராணுவத் தீர்வொன்றின் மூலம் சிங்களப் பேரினவாத ஆட்சியை இலங்கை முழுவதும் நிறுவ முயலும் →

பெரும்பாலும் வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள 72 காட்டுப் பிரதேசங்கள், விலங்குகளின் சரணாலயங்கள் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள கெரில்லாத் தளங்களை விமானங்கள் மூலம் குண்டு மழை பொழிந்து அழிப்பதே சிறீலங்கா அரசின் நோக்கமாகும். இவற்றிலிருந்து பெரியதொரு யுத்தம் ஒன்றிற்கு தன்னைத் தயார்படுத்தி வருகிறது சிங்கள அரசு


ஒரு வருடத்துள் பயங்கரவாதத்தை ஒழிப்பேன் என்று ஜே.ஆர். லண்டனில் அண்மையில் கொக்கரித்திருப்பதும் இதனைத் தெளிவுபடுத்துகிறது. ஆனால் தன்னைச் சமாதானப் பிரியன் போலவும், தமிழருடைய பிரச்சினைகளை உண்மையாகவே தீர்க்க முயல்பவர் போலவும் ஜே.ஆர். நடிக்கிறார். தீர்வொன்றினை விரும்பாத பிரிவினைவாதப் பயங்கரவாதிகள் என்று எம்மை உலகுக்கு எடுத்துக் காட்டுமுகமாக பிரச்சாரத்திலும் சிறீலங்கா அரசு ஈடுபட்டு வருகிறது. எமக்கெதிராக உலகளாவிய பிரச்சாரத்தை முடுக்கி விடும் நோக்கத்துடன் ஒரு பிரச்சார அமைப்பொன்றை ஏற்படுத்தப் போவதாகவும் ஜே.ஆர் கூறியுள்ளார்.

நாம் ஏன் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டோம்? பேச்சு வார்த்தை மூலம் எமது பிரச்சினையை தீர்க்கலாம் என்ற இந்தியாவின் நல்லெண்ண முயற்சியை உதாசீனம் செய்யக்கூடாது. என்ற காரணத்தினாலேயே பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டோம். போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பேச்சு வார்த்தை அல்ல இது. போராட்டத்தின் இடையில் நடைபெறும் உத்தி ரீதியிலான போராட்டத்தின் ஒரு அம்சமே இப்பேச்சு வார்த்தையாகும்.

நாம் முக்கிய அரசியல் சக்தி என்ற வகையில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டதன் மூலம் உலக அங்கீகாரம் எமக்கு கிடைத்தது. சிறீலங்கா அரசு கூறுவது போல் நாம் பயங்கரவாதிகள் அல்ல, நாம் விடுதலை வீரர்கள், சமாதானப் பிரியர்கள். ஆயுதங்களை ஏந்த வேண்டும் என்பதற்காக நாம் ஏந்தவில்லை. எமது மக்களை இன ஒடுக்குமுறையிலிருந்து, இன அழிப்பிலிருந்து காப்பாற்றவே ஆயுதம் ஏந்தினோம். இவற்றை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய நிர்பந்தம் எமக்கு இருந்தது. சிறீலங்காவில் நடைபெறுவது ஜனநாயகப் போர்வையிலுள்ள சர்வாதிகார ஆட்சி. போர் ஆயத்தங்களுக்கு கால அவகாசம் தேடவே பேச்சு வார்த்தை நாடகத்தை சிறீலங்கா அரசு நடத்துகிறது. இவ்வுண்மைகளை அம்பலப்படுத்தி, சிறீலங்காவின் சுயரூபத்தை வெளிக்கொணர வேண்டிய பொறுப்பு எமக்கிருந்தது. சிறீலங்கா அரசு எம்முன் வைத்த பிரேரணைகள் மூலம் இதனை வெளிப்படுத்தினோம். அவர்களுடைய பிரேரணைகள் எவ்வளவு அற்பத்தனமானவை; எமக்கு அவமானம் தரக்கூடியவை; எமது தேசிய பிரச்சினையோடு எவ்வித தொடர்பும் அற்றவை; வெறும் நிர்வாக சீர்திருத்தங்களே என்பதை அனைவரும் அறியச் செய்தோம்.

யுத்த நிறுத்த காலத்தில் ஆயுத சேகரிப்பில் சிறீலங்கா அரசு வளர்ச்சி கண்டது உண்மை தான். இது தொடர்பாக எமது தலைவர் பிரபாகரன் கூறிய கருத்தைப் பார்ப்போம். ''ஆயுதம் முக்கியம் தான் ஆனால் அந்த ஆயுதத்தை ஏந்துகின்ற கையின் பலம்தான் அதைவிட முக்கியம்''. எனவே மக்களின் பலத்தை உணர்ந்து அவர்களிடையே மேலும் மேலும் யுத்த நிறுத்த காலத்தில் ஊடுருவினோம். அவர்களுடைய இன்ப துன்பங்களில் கலந்து கொண்டோம். அவர்களுடைய சமூக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் முன்னின்று உழைத்தோம். மக்களுடன் சேர்ந்து உணவுற்பத்தியில் ஈடுபட்டோம். சிரமதான வேலைகளில் கலந்து கொண்டோம். மக்களை அரசியல், இராணுவ ரீதியாக தயார்படுத்துவதிலும், போராளிகளை உருவாக்குவதிலும், பயிற்சிகளை அளிப்பதிலும், தமிழீழமெங்கும பரவப் உள்ளமைப்புக்களை ஏற்படுத்துவதிலும் முன்னேற்றமாக செயல்பட்டு வந்தோம்; வருகிறோம். மக்களுக்கு கஸ்ரங்களை விளைவிக்கும் துன்பம் தரும் கருமங்களைச் செய்யாது விலகினோம். மக்களிடமிருந்து எமக்குத் தேவையானவற்றை மரியாதையாகப் பெற்றுக் கொண்டோம். மக்களும் மனமுவந்து எமக்கு ஆதரவளித்தனர். வாகனக் கடத்தல், களவுகள் போன்ற சமூக விரோதச் செயல்களைக் கண்டித்தோம். அவற்றைத் தடுக்க முயன்றோம். எமது இயக்கத்தை வளர்ப்பதற்காக மற்ற இயக்கங்களை கண்டபடி திட்டித் தீர்க்கவில்லை. எமது செயல்கள் மூலம் மக்கள் எம்மை இனம் கண்டு கொண்டார்கள்.

இப்போர் நிறுத்த காலத்தில் தான் நடாத்திய படு





வவுனியா, திருகோணமலையில் வெறித் தாக்குதலுக்குள்ளான வீடுகள்.

**பிழை திருத்தம் — எதிர்ப்பக்கத் தொடர்ச்சி கீழே:**

காண விரும்புகிறது என்றும், தான் எவ்வளவோ இறங்கி வந்து தமிழ் மக்களுக்கு பல சலுகைகள் வழங்கியும் தமிழ் இயக்கங்கள் தமிழீழக் கோரிக்கையை விடாப் பிடியாக வைத்துக் கொண்டு இருக்கின்றன என்றும் உலகுக்கு எடுத்துக் காட்டவே பேச்சு வார்த்தை நாடகத்தில் நடிக்கிறது சிறீலங்கா அரசு. இதன் மூலம் உலகத்தின் கண்களுக்கு எம்மை நியாய







அகதிகளாக இடம் பெயரும் மக்கள்

**தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. இந்த நிலைப்பாட்டினுல் எமது அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கும் உரிமை எமக்கே உண்டு.**



சிறிலங்கா அரசு ஏன் யுத்த நிறுத்தத்துக்கும், பேச்சு வார்த்தைக்கும் உடன்பட்டது? எமது சளைக்காத போராட்டத்தினுல், கெரில்லாத தாக்குதல்களினுல் சிறிலங்கா அரசாங்கம் ஆட்டம் கண்டது. யாழ்ப்பாணம், மன்னர் ஆகியவற்றில் நடத்தியவை போன்ற வெற்றிகரமான தாக்குதல்கள் சிறிலங்காவை இனி கொள்ளச் செய்தன. சிறிலங்கா இராணுவ வீரர்களின் மன உறுதி சிதறடிக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்துகிறுர்கள் என்று கேள்விப்பட்டவுடன் குலை நடுக்கம் ஏற்பட்டு எதிர்த்துப் போராடுதலை விடுத்து ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சிங்கள ஆயுதப்படையினர் ஓட்டம்பிடித்ததுடன்எம வீரர்களிடம் சரணடைந்தனர். அவர்களை நாம் விசாரித்த பின் விடுதலை செய்தோம். எமது தாக்குதல்களின் போது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கடிதங்கள் ஆகியவை எம்மைக் குறித்து எவ்வளவு தூரம் பயம் கொண்டிருந்தார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டின.

பொருளாதார ரீதியாக சிறிலங்கா அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சிறிலங்காவின் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தருவதில் இரண்டாவது இடத்தை உல்லாசப் பயண வாத்தகம் வகித்தது. இது பெருமளவு வீழ்ச்சியடைந்தது. உணவுற்பத்தி, மீன்பிடித்துறை என்பன மிகவும் பாதிப்படைந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. மக்கள் வறுமையில் வாடினர். சிறிலங்காவுக்கு உதவுகின்ற நாடுகளின் நிதியுதவிகள் நிறுத்தப்பட்டன. அதே வேளை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான செலவினம் எட்டு மடங்காக அதிகரித்தது. இதனுல் சிறிலங்கா பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்தது. பொருளாதார ரீதியாக ஒரு அரசை சீர்குலையச் செய்வதில் எமது கெரில்லாப் போர் முறை வெற்றியைக் கொடுத்தது.

இறுதியாக சிங்களப் பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்களும் சிறிலங்காவின் முதுகெலும்பை உடைத்தன. சிங்கள மக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். பௌத்த மகா சங்கம் போன்ற பேரினவாத அமைப்புகளுக்குக்கூட தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று ஏற்பட வேண்டும் என்ற ஞானேதயம் உதித்தது. எனவே இந்தியாவின் காலைப் பிடித்து பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறு வேண்டினுர் ஜே.ஆர். இதனுல் இராணுவத் தீர்வு என்ற கொள்கையை சிறிலங்கா அரசு கைவிட்டது என்று கருதக் கூடாது. தனது உத்திகளை மாற்றிக் கொண்டது என்றே கூறலாம்.

இந்தியாவுடன் எதிர்த்து நின்றுகொண்டு எதனையும் சாதிக்க முடியாது என்று சிறிலங்கா உணர்ந்து கொண்டது. சீர்குலைந்த இராணுவத்தை சீர்படுத்த கால அவகாசம் தேவைப்பட்டது. Aid Consortium என்ற மேற்கத்தைய நாடுகளின் அமைப்பிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் நிதி உதவி பெற்று இராணுவத்தைக் கட்டி வளர்க்கவும், நவீன ஆயுதங்களை வாங்கி போர் வீரர்களுக்கு அவற்றில் பயிற்சியளித்து பாரிய யுத்தமொன்றிற்கு முஸ்தீபு செய்ய சிறிலங்கா திட்டமிட்டது. யுத்த நிறுத்தம் யூன் 18—ம் திகதி அறிவிக்கப்பட்டவுடன் சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக கூறி Aid Consortium மிடமிருந்து 480 கோடி ரூபாய் உதவியாக பெற்றது. மிக அண்மையில் ஜே.ஆர். பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பகாமாஸ் சென்றிருந்தபோது பொதுநலவாய நாடுகளிடமிருந்து நிதி, இராணுவ உதவிகளைக் கேட்டார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறின. நியூசிலாந்து, ஆவுஸ்திரேலியா, கனடா போன்றவை அவருடைய விண்ணப்பத்தை நிராகரித்து விட்டதாகவும் பிரிட்டன் உதவ ஒத்துக் கொண்டதாகவும் அறிந்தோம். திரும்பும் வழியில் இஸ்ரேலியப் பிரதமர் ஷிமன் பெரசை பாரிஸில் சந்தித்து இராஜதந்திர உறவுகளைப் புதுப்பிப்பது பற்றியும், இராணுவ உதவிகளை மேலும் பெறுவது பற்றியும் ஆராய்ந்ததாக தெரிந்து கொண்டோம்.


ஹெலிக்கொப்டர்களை, விமானங்களை, கப்பல்களை வாங்கி தனது பலத்தை பெருக்கி வருகிறது சிறிலங்கா அரசு. கட்டாய இராணுவ சேவையைப் புகுத்தி ஆட்பலத்தை அதிகரிக்கிறது. கட்டாயமாக ஆயுதப் படைகளில் சேர்க்கப்பட்டோரும் நாலந்த, ரோயல் போன்ற கொழும்புக் கல்லூரிகளிலிருந்து சாகசச் செயல்கள் புரிய வேண்டுமென்று சேர்ந்து கொண்டோரும், இஸ்ரேலிய சின்பெத் (Shin Beth) என்ற உளவு அமைப்பினுலும் எஸ்.ஏ.எஸ். (S.A.S) கே.எம்.எஸ் (K.M.S) போன்ற கூலிப் படையமைப்புகளினுலும் பயிற்சியளிக்கப்படுகிறுர்கள். நவீன ஹெலிக்கொப்டர்கள், விமானங்கள் ஆகியவை இக் கூலிப்படையினராலேயே ஓட்டப்படுகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, சீனு, பாகிஸ்தான் போன்ற நாடுகள் சிறிலங்காவுக்கு மறைமுகமாகவும், வெளியரங்கமாகவும் நிதி, ஆயுத உதவிகள் அளித்து வருகின்றன. பாகிஸ்தானில் ஏராளமானேருக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. பதின்மூன்று மாவட்டங்களிலுள்ள





# ஒரு கண்ணோட்டம்







கொலைகள் மூலம், மேலும் அப்பாவித் தமிழர்களை கைது செய்ததன் மூலம் சிறிலங்கா அரசு தானெரு பாசிச அரசு என்பதை தெளிவாக உலகுக்கு காட்டியது. இராணுவம் கட்டுக்கடங்காமல் செயற்படுகிறது என்று கூறிக் கொண்டு சிறிலங்கா அரசு தானே முன்னின்று பல இனப் படுகொலைகளை நடத்தியது. சிறிலங்காவின் ஜனுதிபதியும், பிரதமரும் அண்மையில் ஒரே நேரத்தில் வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற் கொண்டிருந்து சிறிலங்காவின் இராணுவம் பூரண கட்டுப்பாட்டுள் இருக்கிறது என்பது புலனுகிறது. சிறிலங்கா அரசின் இனப்படுகொலைத் திட்டம் எமது போராட்டத்தை மேலும் உறுதி செய்தது. எமது கோரிக்கையை வென்றெடுப்பதற்கான தார்மீக பலத்தை மேலும் வளர்த்தது.

பேச்சு வார்த்தைக்கு எதிராக தமிழீழத்தின் பல பகுதிகளில் மக்கள் எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தினுர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். வெறும் பார்வையாளராக இராது மக்களும் விடுதலைப் போராட்டத்தில் எம்முடன் தீவிரமாகப் பங்கு பற்றுகின்றனர் என்பதை இதன் மூலம் எடுத்துக் காட்டினர். தமிழின எழுச்சிக்கு உந்து சக்தியாக மக்கள் விளங்குவார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகியது. மக்கள்! மக்கள்!! மக்களுக்காகவே போராட்டம். மக்களாலேயே போராட்டம். மக்களின்றிப் போராட்டமே இல்லை எனுமாறு அவர்களது எழுச்சி அமைந்திருந்தது. பள்ளிச் சிறுர்களு, பெண்கள், வயது முதிர்ந்தோர் ஆகிய அனைத்து மக்களும் பெருவாரியாகக் கலந்து கொண்ட இந்த மக்கள் எழுச்சி தமிழீழ சுதந்திரப் போராட்டம் வெகுசனங்களால் முன்னெடுக்கப்படும் என்பதற்கு முன்னறிவிப்பாக அமைந்தது. இந்திய அரசின் நல்லெண்ணத்துக்கு, அதனுடனுன உறவுக்கு பங்கம் ஏற்படுத்துவது எமக்கு பாதகமானது என்பதை உணர்ந்து தான் இப் பேச்சு வார்த்தைகளில் நாம் கலந்து கொண்டோம். ஆனுல் தமிழீழம் கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயப் போவதில்லை என்பதை எமது மக்கள் உணராமல் இல்லை. ஆயினும், இவ்வூர்வலங்கள் மக்கள் போராட்டம் மலர்கிறது என்ற உண்மையை எடுத்துக் கூறுவதாய் அமைந்ததோடு இளம் தலைமுறையுடன் மக்களின் ஒருமைப்பாட்டையும் புலப்படுத்துவதாய் விளங்கின.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் சரியான முறையில் அமுல் நடாத்தப்படாமலேயே பேச்சு வார்த்தை ஆரம்பமாகியது. பூட்டானின் தலைநகராகிய திம்புவில் யூலை 8ம் திகதி முதல் கட்டப் பேச்சு வார்த்தை தொடங்கியது. பின்னர் ஆகஸ்ட்டு மாதம் 12ம் திகதி இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தை திம்புவில் தொடங்கி நடைபெற்றது. வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற இனப்படுகொலைகளைத் தொடர்ந்து தமிழ் பிரதிநிதிகள் வெளியேறியதுடன் பேச்சு வார்த்தை முறிவடைந்தது. சிறிலங்கா

இதுவரை சமர்ப்பித்த சமரசத் திட்டங்கள் தமிழ் மக்களுடைய அடிப்படை அரசியல் அபிலாஷைகளைத் தானும் திருப்திப் படுத்துவதாய் இல்லை. மாவட்ட சபை, மாகாண சபை என்ற வட்டத்துக்குள்ளேயே சிறிலங்கா அரசு சுற்றிச் சுற்றி வருகிறது. அதிகாரப் பங்கீடு (Devolution) என்று கூறிக் கொண்டாலும் அதிகாரப் பரவலை (Decentralisation) செய்வதற்கே சிறிலங்கா அரசு முயல்கிறது. பூரண அதிகாரங்களை மத்திய அரசிடம் வைத்திருக்க எண்ணுகிறது. மத்திய அரசின் கைகளைப் பலப்படுத்தி சிங்களப்



பேரினவாத ஆட்சியை இலங்கை முழுவதும் நிலை நாட்டுவதே அதன் அடிப் படை நோக்கமாகும்.

இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட சமரஸத் திட்டங்களின் படி நிர்வாக அதிகாரம் அனைத்தும் மத்திய அரசின் கையிலேயே இருக்கும். சில உபசட்டங்களை இயற்றும் அதிகாரம் இந்த மாவட்ட மாகாண சபைகளுக்கு இருந்த போதும் அவ்வதிகாரம் ஜனுதிபதியின் கட்டுப்பாட்டுக்கும், அநுமதிக்கும் உட்பட்டே இருக்கும். இச் சபைகளுக்கென ஒதுக்கப்படும் நிதியும் ஜனுதிபதியால் நியமிக்கப்படும் ஒரு கமிஷனுலேயே நிர்ணயிக்கப்படும். உண்மையில் பார்க்கப் போனுல் இச்சபைகளுக்கு அதிகாரம் பங்கிடப் படவில்லை. இச்சபைகளை தனது கட்டுப்பாட்டுள் வைத்து நடாத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரம் அதிகரிக்கப்படுகிறது என்பதே சரியானது. இச்சபைகளைத் தனது கட்டுப்பாட்டுள் வைத்திருப்பதன் மூலம் தமிழ் மக்களை தனது ஆதிக்கத்தின் கீழ் நிரந்தர அடிமைகளாக வைத்திருக்கவே சிறிலங்காவின் பேரினவாத அரசு விரும்புகிறது என்பது புலனுகிறது.

இந்தியாவில் உள்ளது போன்ற ஒற்றையாட்சிக்கும், சமஷ்டி ஆட்சிக்கும் இடைப்பட்ட முறையை இலங்கையில் கொண்டு வரும் நோக்குடன் இந்தியா செயற்பட்டாலும் சிறிலங்கா அரசு சிறிது தானும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. இராணுவத் தீர்வு ஒன்றையே கருத்திற் கொண்டு அது ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறது. அதே வேளை பேச்சு வார்த்தையின் மூலம் அரசியல் தீர்வொன்றை

மற்றவர்களாகக் காட்டுவதுடன் மாத்திரமின்றி இந்தியாவும் எமக்குமிடையே பிளவையும், வெறுப்பையும் ஏற்படுத்தச் சதி செய்கிறது. தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு நாம் இறங்கி வந்தால் தமிழீழ மக்களிடமிருந்து நாம் அந்நியப்படுத்தப்பட்டு விடுவோம் என்று நப்பாசை கொள்கிறது. இப்போலி வேடத்தை கலைத்தெறிந்து சிறிலங்காவை உலகுக்கு அம்பலப் படுத்துவதே எமது நோக்கமாகும். தற்போதுள்ள ஒற்றையாட்சி அமைப்பின் கீழேயே தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முயல்வது எமது பிரச்சினையை உண்மையாக இதய சுத்தியாகத் தீர்ப்பதற்கு சிறிலங்கா அரசு விரும்பவில்லை என்பதைக் காட்டுகிறது. சமஷ்டி அரசு தனியரசு எனும் கோரிக்கைகள் தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட பின்னர் அவற்றை முறியடிக்கு முகமாகவே 1978ம் ஆண்டு அரசியல் திட்டத்தில் புதிய ஷரத்தொன்றைப் புகுத்தினர். அதன்படி சர்வஜன வாக்கெடுப்பின்றி ஒற்றையாட்சி அமைப்பை மாற்றுதல் போன்ற சில விடயங்களில் அரசியல் திட்டத்தில் மாற்றம் செய்ய முடியாது என்று ஏற்பட்டது.

ஆயுதப் போராட்டமோ, தமிழீழக் கோரிக்கையோ திடீரென்று தோன்றியதல்ல. வரலாற்று ரீதியான காரணிகளே அவற்றைத் தோற்றுவித்தன. அரசியல், பொருளாதார கலாச்சார, இன ஒடுக்குமுறையின் பரிணாம வளர்ச்சியே எமது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. எனவே தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டம் முடிந்த முடிவாக வரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே திம்புப் பேச்சு வார்த்தையின்போது இக்கோரிக்கையை நெறிப்படுத்தும் நான்கு அடிப்படைக் கோட்பாடுகளை முன் வைத்தோம். அவையாவன.

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என அங்கீகரிப்பது. 2. தமிழ் மக்களது பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிப்பது. 3. தமிழ் மக்களது சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பது. 4. மலையகத் தமிழ் மக்களது குடியுரிமையை அங்கீகரிப்பது.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக இருக்கின்றனர். பொது மொழி, பொதுக் கலாச்சாரம் பொதுப் பொருளாதார வாழ்வு, பொது உளவியல் பாங்கு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு பாரம்பரிய பிரதேசத்தில் வாழ்கின்ற, வரலாற்று ரீதியாக அமைந்த சமூகமே தமிழ் தேசிய இனமாகும். கடந்த கால வரலாறு மட்டுமல்ல நிதர்சனமும் இதை வலியுறுத்துகிறது. புறம்பாகப் பிரிக்கப்பட்டு இச்சமூகம் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதும் தேசிய இனம் என்ற கருத்துக்கு வலுவை ஊட்டுகிறது. அடக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் அம்மக்கள் ஒரு தேசிய இனமாக ஒன்றுபடுவதில் இறுக்கம் ஏற்படுகிறது. அது மாத்திரமல்ல தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் போராடுவதன் மூலமே தாம் பிழைத்து வாழ முடியும் என்பதோடு சுதந்திரமான சமத்துவமான எதிர்காலத்தை அமைக்கவும் முடியும் என்ற நம்பிக்கையும் கொள்கிறார்கள். இதுவும் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற யதார்த்தத்தை நிலைப்படுத்துகிறது.

ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒரு தாயகத்துக்கான பாரதீனப்படுத்த முடியாத உரிமை உண்டு. அடையாளங் காணக் கூடிய வரையறுத்துக் கூறக் கூடிய, வரலாற்று ரீதியாக அமைந்த எமக்கென்றொரு நிலமுண்டு. அது எமது மூதாதையர் வாழ்ந்த நிலம். பொது உழைப்பினால் உருவான நிலம். இவ்வாறு புவியியல் ரீதியாக அமைந்த தொடர்ச்சியான நிலப்பரப்பையே எமது பாரம்பரியத் தாயகம் என அழைக்கிறோம். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு. இந்த நிலைப்பாட்டினால் எமது அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கும் உரிமை எமக்கே உண்டு. இன்னொரு சுதந்திர நாட்டுடன் இணைந்திருப்பதோ அல்லது பிரிந்து ஒரு புதிய இறைமையுள்ள சுதந்திர நாட்டை உருவாக்குவதோ என்பதைத் தீர்மானிக்கும் உரிமை தமிழ் மக்களுக்கே உண்டு.

மலையகத்தில் வாழ்கின்ற எமது உடன் பிறப்புகளான தமிழ் மக்களின் 4 இலட்சத்துக்கு அதிகமானோருடைய நாடற்ற தன்மை நீக்கப்பட்டு அவர்களுடைய குடியியல் உரிமை, அடிப்படை ஜனநாயக உரிமைகள் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்.

செப்டெம்பர் மாதம் எமது தலைவரும் மற்றும் ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்களும் பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்து உரையாடினர். பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் மக்கள் சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்ற கருத்தை ஏற்பதாகவும் அதற்கு இந்தியாவின் ஆதரவு எப்போதும் இருக்குமென்றும் கூறினர். ஆனால் அதே வேளை இடைக்காலத் தீர்வொன்றை தமிழ் மக்கள் ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்காத இடைக்காலத் தீர்வு பற்றிய பேச்சு வார்த்தை எம்மை எம்மக்களிடமிருந்து பிரிக்கவே வழி வகுக்குமென்று எமது தலைவர் உறுதியாகக் கூறினர்.

பின்னர் இந்திய அதிகாரிகளுடன் நடந்த பேச்சு வார்த்தைகளின் போது அரசியல் தீர்வு பற்றி ஆராயப்பட்டது. சிறிலங்கா அரசு இந்தியாவுக்கூடாக ஒரு பிரேரணையை எம்முன் சமர்ப்பித்தது. சர்வகட்சி மாநாடு, திம்பு 1, திம்பு 2 ஆகியவற்றில் வைக்கப்பட்ட பிரேரணைகளுக்கும் இதற்குமிடையே பாரிய வேறுபாடு இருக்கவில்லை. இப்பிரேரணையின் படி கிழக்கு மாகாணத்துக்கும் வடமாகாணத்துக்குமென இரு மாகாண சபைகள் அமையும். அது தவிர கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நகரம் மத்திய அரசின் அதிகாரத்துள் இருக்கும். மாகாணங்களிலுள்ள மாவட்டங்கள் விரும்பினால் பிரிந்து மாவட்ட சபைகளாக செயல்படலாம்.

இம்மாகாண மாவட்ட சபைகளும் மத்திய அரசின் பூரண கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும். உள்ளூரில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டல், நிலக் குடியேற்றம் ஆகியவற்றில் சில சலுகைகள் அளித்திருப்பது போன்ற மாயையை ஏற்படுத்தி இருந்தார்கள். விவாதத்திற்கு எடுக்க முடியாத இவ்வேலைத் திட்டத்தை எமது இயக்கமும், மற்றும் ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஈழப்புரட்சி இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியன நிராகரித்தன. இலங்கையில் இருதேசிய இனங்கள், இரு மக்கள் சமூகங்கள் உள்ளன; அவையிரண்டும் தனித்தனியாக பிரிந்து இரு நாடுகளாக அமையும் தகுதி பெற்றவை என்ற அடிப்படையில் எம்முன் வைக்கப்படுகின்ற பிரேரணைகள் பற்றியே எம்மால் விவாதிக்கவோ ஆராயவோ முடியும் என்றும் இது தவிர்ந்த எது குறித்தும் பேச முடியாது என்றும் ஆணித்தரமாகக் கூறி விட்டோம்.

TULF இவ்வேலைத் திட்டத்தை விமர்சித்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்தல் உள்ளூர் சட்டமும் ஒழுங்கும், நிலக் குடியேற்றம் தொடர்பான தனது கருத்துக்களையும் அதில் வெளியிட்டது. அதாவது மாநில சபை (Regional Council) தொடர்பான விட்டுக்கொடுக்க முடியாத கொள்கைகள் என்று சிலவற்றை அதில் குறித்திருந்தார்கள்.

மேலே கூறிய ஐந்து அமைப்புக்களையும் தவிர்ந்த இன்னொரு இயக்கம் அவ்வேலைத் திட்டத்தை விவாதத்துக்கெடுத்து விமர்சித்து அவ்வேலைத் திட்டத்தில் மேலும் திருத்தங்கள் செய்தது. அவ்வியக்கம் சுவிற்சலாந்து முறையிலமைந்த சமஷ்டித் திட்டத்தை இந்தியாவிடம் சமர்ப்பித்துள்ளது என்ற உண்மையையும் நாம் அறிந்து கொண்டோம். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை குறித்து அவ்வியக்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவரே அங்கு ஒத்துக் கொண்டார்.

இவ்வாறான மூன்று நிலைப்பாடுகளையும் செவிமடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் பண்டாரி தமிழீழ விடுதலைக் கூட்டணியால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும், அதற்கான திருத்தங்களையும் பகாமாஸிற்கு பொது நலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் போது பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துச் செல்வார் என்று கூறினர். எமது இயக்கமும், தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த மற்றைய மூன்று இயக்கங்களும் இவ்வேலைத் திட்டத்தையோ அதற்கான திருத்தங்களையோ அங்கீகரிக்கவில்லையென்று அடித்துக்கூறி விட்டன

பகாமாவில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் உரையாடி விட்டு பிரதமர் ராஜீவ் காந்தியும், ரொமேஷ் பண்டாரியும் திரும்பி வந்துள்ளனர். முன்பு எம்மிடம் சமர்ப்பித்த வேலைத் திட்டத்தில் மேலும் சில திருத்தங்களை செய்திருக்கலாம். அது எமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகவோ அல்லது அவர்களது துன்பங்களை நிரந்தரமாகத் துடைப்பதாகவோ இருக்க முடியாது. தமிழீழ மக்கள் விரும்பாத எதனையும் திணிக்காது என இந்தியா எப்போதும் கூறி வந்துள்ளது. ஆயினும் இதனை ஓர் இடைக்காலத் தீர்வாக ஏற்கும்படி கூறலாம். நாம் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு பரம்பரம் விட்டுக் கொடுத்து வருவதைப் பெற்றுக் கொண்டு போராட்டத்தைத் தொடரலாம் என்று இந்தியா எமக்கு ஆலோசனை கூறலாம். இது தற்கொலைக்கு ஒப்பானது என நாம் அறிவோம். தமிழீழப் போராட்டத்தை எம்மால் கைவிட முடியாது என்பதையும் நாமறிவோம். எம்மைக் கைவிடச் செய்து மக்களிடமிருந்து அந்நியப்படுத்திய பின் எம்மை நசுக்குவதே ஜே. ஆரின் திட்டம் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் இந்தியாவுடனான நல்லுறவையும் முறித்துக் கொள்ள நாம் விரும்பவில்லை. தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக்கும் இடைக்காலத் தீர்வு என்ற இப்பொறியிலிருந்து இந்தியாவின் நல்லுறவை முறிக்காமல் தப்பிக் கொள்வதே புத்தி சாலித்தனம். பேச்சு வார்த்தைகளிலிருந்து ஒதுங்குவதே அறிவுடைமை. அற்ப ஆசைகளுக்காக பொறியில் விழுபவர் விழட்டும். எமது இலட்சியத்துக்காக எந்த எதிர் விளைவு ஏற்பட்ட போதிலும் அதனைத் தாங்கி எமது வழியில் நடப்பதே சிறந்தது. எமது மக்களின் விடிவுக்காக, அவர்களது சுதந்திரத்துக்காக எமது மக்களின் ஆதரவுடன் தொடர்ந்து போராடுவோம்.

அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஊடுருவலை, அவற்றின் ஆதிக்கத்தை தடுக்கவும் பேரினவாத சிறிலங்கா அரசு இந்தியாவின் தெற்கில் அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக செயல்படாதிருக்கவும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவும் தமிழீழம் உருவாவது அவசியமானது. அவ்வாறு அமைவது ஒரு தவிர்க்க முடியாத யதார்த்த உண்மையாக நிதர்சன நிகழ்ச்சியாக விளங்குகிறது. எனவே இவ்வுண்மையை ஏற்றுக் கொண்டு இந்தியா எமது மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

அமையப்போகும் தமிழீழம் இந்தியாவுக்கு நட்புக்கரம் நீட்டி அதற்கு உறுதுணையாக அமையும். அதன் பாதுகாப்புக்கு பலமாக விளங்கும். தமிழ் மக்களும், அவர்களது தமிழீழமும் இந்தியாவால் புறக்கணிக்க முடியாதவை. அது மாத்திரமல்ல ஒன்றிலிருந்து ஒன்று அவற்றின் நலன்கள் பிரிக்கப்பட முடியாதவை. இந்தியாவின் நட்பு எமது போராட்டத்துடன் ஒன்றிப் போனது ஆயினும் அந்த நட்பை இழந்து போயினும் நாம் நமது மக்களுக்காக நமது மண்ணில் தொடர்ந்து போராடத்தான் போகிறோம். எமது தலைவர் பிரபாகரன் கூறியது போல், "தமிழீழம் அமையத்தான் போகிறது அதனை உலகத்தில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. எந்த வெளிச் சக்தியையும் நம்பி எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. எமது இலட்சியத்தை அடையும் வரை போராடிக் கொண்டே இருப்போம்"!

**பிற்குறிப்பு :-** இந்தியாவின் சமாதான முயற்சிகளுக்கு நாம் தடையாக இருக்க மாட்டோம் என்ற எமது நிலைப்பாட்டின் அடிப்படையில், டி. யு. எல். எப். பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு தீர்வொன்றைக் காணமுயல்வதற்கு இந்தியா தொடர்ந்து உதவுகிறது.



**"எந்த வெளிச் சக்தியையும் நம்பி எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. எமது இலட்சியத்தை அடையும் வரை போராடிக் கொண்டே இருப்போம்."**

---

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**Liberation Tigers of Tamil Eelam**

அன்புடையீர்,

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கியமான காலகட்டத்தில் இருக்கும் இந்நேரத்தில் நாமும் நம்மக்களும் பல சோதனைகட்குள்ளாக்கப்பட்டு வருகின்றோம்.

[illegible]

[illegible]


நன்றி.


புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அன்புடன்
நிதிக்குழு சார்பில்
(க. பப்பா)

எமது வங்கிக் கணக்கு இல - 45578 - 58/1

**Mr. K. PAPPA**
INDIAN BANK
PURASAWAKKAM BRANCH
MADRAS - 600 007.





அமெரிக்கா, பிரிட்டன், சீனு ஆகிய நாடுகளின் நட்பு நாடுகளாகவும் அமெரிக்காவின் கேந்திர நலன்களை தெற்காசியப் பிராந்தியத்தில் பேணுவனவாகவும் ஸ்ரீலங்காவும், பாகிஸ்தானும் விளங்குகின்றன. ஸ்ரீலங்காவிற்கு ஆயுதங்களை, இராணுவ பயிற்சிகளை வழங்கியும், இலங்கைத் தமிழ் மக்களை இந்து, முஸ்லிம் என மத அடிப்படையில் பிரிக்கவும் பாகிஸ்தான் உதவுகிறது. இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக, ஒரு அழுத்தம் கொடுக்கும் இன்னொரு பகுதியாக இலங்கையை மாற்றும் நோக்கிலும் பாகிஸ்தான் செயற்படுகின்றது.


—டெக்கான் ஹெரால்ட்



இந்தியா டுடேக்கு J.R. கொடுத்த பேட்டியில் சில வரிகள்.

தமிழர் பிரச்சினை ஒரு இராணுவப் பிரச்சினை - எந்த இராணுவப் பிரச்சினையும் இராணுவ ரீதியாகத்தான் தீர்வு காணப்படவேண்டும்.

பேச்சு வார்த்தைகளுக்கான காலக்கெடு, டிசம்பர் மாதம். அதற்கு அப்பால் பேச்சுவார்த்தைகளைத் தொடரமாட்டோம். இந்தியா 24 மணி நேரத்தில் ஸ்ரீலங்காவை கைப்பற்றி என்னை கைது செய்துவிடலாம். ஆனால் அப்படி நடந்தால் சிங்களவர் மத்தியில் வாழுகின்ற அத்தனை தமிழ் மக்களும் அந்நொடியிலேயே கொல்லப்பட்டுவிடுவார்கள்.



யாழ்ப்பாணத்தை கட்டுப்படுத்துவது கஷ்டம் அல்ல. அதற்கு முன்னர் மற்ற மாகாணங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவு விநியோகத்தை தடை செய்வதன் மூலம் ஒரு மாதத்தில் ''பயங்கரவாதிகளை'' அழித்தொழித்து விடுவோம்.




புலிகளின் இடைவிடாத தாக்குதலுக்குப் பயந்து தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்ற சிங்கள இராணுவத்தினர் அச்சங் கொண்டுள்ளனர். தமிழ்ப் பகுதிக்குச் செல்வதை கொலைக்களத்துக்குச் செல்வது போல எண்ணுகின்றனர். இலங்கை அரசின் இராணுவப் பயிற்சிக்கு செல்வதற்கு சிங்கள இளைஞர்கள் முன்வரவில்லை. இதனால் இலங்கை அரசு கட்டாய இராணுவப் பயிற்சிக்கு ஒரு சட்டம் கொண்டுவந்து அதை மீறுபவர்களுக்கு நான்கு ஆண்டு சிறைத் தண்டனை என்றும் அறிவித்தது.



அண்மையில் தியத்தலாவை இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த கம்புறுப்பிட்டிய திஹகொடையைச் சேர்ந்த கமகே பேர்சி என்ற 29 வயது சிங்கள இளைஞர் இராணுவப் பயிற்சிக்கு தொடர்ந்து செல்ல அஞ்சி நஞ்சிடம் தஞ்சம் அடைந்தார்.

டிசம்பர் 20, 21ம் திகதிகளில் அரியாலை, மானிப்பாய் ஆகிய இடங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் எமது தளங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. வியட்னாமில் அமெரிக்கர் கைக்கொண்டது போல் ஹெலிகொப்டர்களில் வந்து மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். பாரிய இழப்புக்களை எதிர்கொண்ட இராணுவத்தினர்கள் இறந்தவர்களையும், காயப்பட்டவர்களையும் - தூக்கிக்கொண்டு தப்பினோம் பிழைத்தோம் என்று பின்வாங்கி ஓடி ஹெலிகொப்டர்களில் தப்பினர். இச்சம்பவங்களின்போது எமது இரு தோழர்கள் வீரமரணம் அடைந்தனர். வேறு இயக்கங்களும் எம்முடன் ஒத்துழைத்தது குறிப்பிடத்தக்கது. இச்செய்தி கேட்ட அப்பகுதி மக்கள் குதூகலித்து, விடுதலை வீரர்களை வாழ்த்தி ஆர்ப்பரித்தனர்.

28-12-85 அன்று மன்னார் மாவட்டத்தில், எமது முகாம்களை முற்றுகையிட வந்த இராணுவத்தினர் மீது எமது அதிரடிப் படைப்பிரிவினர் மேற்கொண்ட தாக்குதல்களில் 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 3 ஜீப் வண்டிகள் முற்றுகச் சிதறடிக்கப்பட்டன. 3 இடங்களில் நடைபெற்ற இம்மோதல்கள் காலை 7 மணிக்கு தொடங்கி 3 மணிவரை நீடித்தன. ஹெலிகொப்டர்கள் பின்வாங்கின. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. எமது தரப்பில் சேதம் எதுவுமில்லை போராளிகளுடன் மக்கள் வெற்றி ஆர்ப்பரிப்பில் கலந்து கொண்டனர்.

கார்ட்டூன்கள்;
R.K. இலட்சுமணன்
மதன்
தினத்தந்தி
தினசரி
(நன்றி)

அண்மையில் தமிழீழ பகுதியில் பெய்த அடைமழையினுல் பாதிக்கப்பட்ட இஸ்லாமிய தமிழ் மக்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் உதவியமைக்காக யாழ் பொம்மைவெளி, சாபிநகர் இஸ்லாமியத் தமிழர்கள் துண்டுப் பிரசுரம் மூலம் பாராட்டியுள்ளனர். அத்துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது :-

''யாழ்ப்பாணத்தில் பெய்த பெருமழை காரணமாக பொம்மைவெளி சாபிநகர் ஆகியவற்றில் வாழ்ந்து வந்த 75 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டு அப்பகுதியில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த 75 குடும்பங்களிலிருந்து 40 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 200 பேர் யாழ் ஒஸ்மேனியாக் கல்லூரியில் தஞ்சமடைந்தனர். அன்ன ஆகாரமின்றி அவதிப்பட்டார்கள்''

''இந்தநிலையில் எமதுமக்களின் செய்தியை கேள்விப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடியாக வந்து தங்களின் கட்டுப்பாட்டில் அவர்களை வைத்திருந்து தொடர்ந்து மூன்றுவேளை உணவு, தேனீர், மருந்துவகைகள் எல்லாம் கொடுத்து அன்றைய நிலையிலிருந்து எங்கள் சகோதரர்களை காப்பாற்றியமைக்காக என்றென்றும் நன்றி கூறக் கடமைப்படுள்ளோம்.






யுத்த நிறுத்தம் அறிவித்த ஜூன் 18-ம் திகதிக்கு பின்னர் 5 மாதங்களில், அதாவது நவம்பர் 19-ம் திகதிக்குள் 1496 தமிழ் மக்களை ஸ்ரீலங்கா இராணுவம் கொன்றுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 25 பேர்மட்டுமே தமிழ்ப் போராளிகள்.

—இந்தியன் எக்ஸ்பிரஸ்

இலங்கை அரசு பாதுகாப்புச் செலவிற்கு இந்த ஆண்டு 619.6 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 283 கோடி ரூபாய் அதிகம். அதாவது 70 வீதம் அதிகரிப்பு. இலங்கையின் மொத்த வருமானத்தில் இது 17 சதவீதம். இப்பணத்தில் நவீன ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியவை கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

—இந்து ஆங்கில தினசரி



வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா அரசு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களை கொன்றும், அடித்து விரட்டியும், அப்பகுதிகளில் சிங்கள மக்களை குடியமர்த்தியும் வருகின்றது. அப்பகுதிகளில் விமானங்களில் இருந்து வீசப்பட்ட குண்டுகள் சில எரிக்கும் நேபாம் குண்டுகளாகவும், சிதறு துண்டுகளை உடைய அதியுயர் சக்தி வெடிமருந்து கொண்டனவாகவும் உள்ளன. வெடிக்காத குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அக்குண்டு ½ நார் பீப்பாய் அளவினதாகவும் 250 கிலோ நிறையுடையதாகவும் இருந்தது. விமானங்கள், ஹெலிகொப்டர்கள் வெளிநாட்டு கூலிப்படையினரால் ஓட்டப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

அகதிகளாக்கப்பட்ட மக்கள் சம்பூர், சேனையூர் கட்டைப்பறிச்சான் ஆகிய கிராமங்களில் தஞ்சம் புகுந்தனர். இக்கிராமங்களை தடை செய்யப்பட்ட பிரதேசங்கள் என அறிவித்த இராணுவத்தினர், அங்கிருந்த தமிழ் பொது மக்கள் அனைவரையும் வெளியேறுமாறு கட்டளையிட்டனர். இதனை எதிர்த்து அகதிகள் முகாமில் உள்ள 600 குடும்பங்கள் உட்பட 800 குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தி வெளியேற்ற உத்தரவைப் புறக்கணித்தனர். இதைத் தொடர்ந்து அக்கிராம மக்கள் நவம்பர் மாதம் 8, 9, 10, 12, 27, 30 ஆகிய திகதிகளில் சிங்கள ஆயுதப் படையினரால் கடல், தரை, ஆகாய மார்க்கமாகத் தாக்கப்பட்டனர். அத்தாக்குதல்களில் 60 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். அகதிகள் தொகை 25000 ஆகப் பெருகியது.

அகதி முகாம்களில் இருக்கின்ற தமிழ் மக்களை விரட்டும் நோக்கத்துடன் ஆயுதப் படையினர் அகதி முகாம்களை அடிக்கடி தாக்கினர். ஒக்டோபர் 1-ம் திகதியிலிருந்து அகதிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த நிவாரண விநியோகங்களையும் நிறுத்தியது ஸ்ரீலங்கா அரசு. இதனுல் அவ்வகதி முகாம்களில் உள்ள தமிழர்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவதுடன் நோயினாலும் பீடிக்கப்பட்டு வருந்துகின்றனர்.

இலங்கை அகதிமுகாம்களில் உள்ள தமிழ் அகதிகள் எண்ணிக்கை பின்வருமாறு; மக்கள் குழு அறிக்கை

| இடம் | அகதிகள் முகாம்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 32 | 26,000 |
| முல்லைத்தீவு | 17 | 8,355 |
| மன்னார் | 4 | 4,313 |
| கிளிநொச்சி | 4 | 3,472 |
| திருகோணமலை | 27 | 48,350 |
| தாண்டியடி | 2 | 260 |
| வவுனியா | 17 | 4,844 |
| பெரியவிழான் | 1 | 296 |
| | 104 | 95,892 |

23-12-85 அன்று காலை 5 மணி அளவில் சென்னையில் - எமது அரசியல் ஆலோசகர் திரு. A. S. பாலசிங்கத்தின் வீடு குண்டு வைத்துத் தாக்கப்பட்டது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். மொசாட்டின் உதவியுடன் - ஸ்ரீலங்கா அரசின் கையாட்கள் செய்த நாசவேலை இது என்பதை சகல கணிப்புகளும் வலியுறுத்துகின்றன.



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட சிதம்பரப்பிள்ளை செல்வச்சந்திரன் என்ற 12 வயதுச் சிறுவன் நீதிபதியினால் தனக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரங்களை ஏற்க மறுத்து, குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியது அரசபயங்கரவாதிகளான ஆயுதப்படையினருக்கே தவிரத் தனக்கல்ல என்று கூறி அக்குற்றப் பத்திரத்தை ஏற்கமறுத்தான். வேறு வழியின்றி குற்றப் பத்திரங்களை மீளப் பெற்றுக்கொண்ட நீதிபதி விசாரணைகளை டிசம்பர் 12ம் திகதிவரை ஒத்தி வைத்தார்.


—வீரகேசரி

கிளிநொச்சிக்கு புதிதாக ஒரு இணைப்பு அதிகாரி வந்துள்ளார். இவர் எல்லா வர்த்தகர்களையும் அழைத்து ஒரு கூட்டம் வைத்துள்ளார். தாங்கள் நகருக்குள் ஒன்றும்செய்ய மாட்டோம் என்றும்,காடுகளில் தான் ''கொட்டியாக்கள் இருக்கிறார்கள்'' அவர்கள் நகருக்கு வந்தால் தங்களுக்கு அறிவிக்குமாறும் கூறியுள்ளார். அங்கு வந்திருந்தவர்களைப் பார்த்து ''கொட்டியா கிளிநொச்சியை விட்டுப் போய் விட்டதோ?'' என்று இணைப்பு அதிகாரி கேட்ட போது அக்கூட்டத்தில் இருந்த ஒருவர் ''வந்த வேலை முடியவில்லை. அதனுல் போகவில்லை'' என்று கூறியுள்ளார்.



# வீர வணக்கம்

வீரர்களை விளைவிக்கும்
வித்துகளாய் போர்க்களத்தில்
வீழ்ந்துவிட்ட
தோழர்களுக்கு





அழாதே
அம்மா, அழாதே
உன்னைப் பிரியும்
காலம் வந்துவிட்டது
கண்மூடித் திறப்பதற்குள்.
இதோ, இப்போதே!

இளம் ரத்தம் துடிக்கிறது
நான் போகிறேன்.
அழாதே — உன்
செல்ல மகனுக்காக!

இனியும் அழாதேம்மா,
அதோ என்னை
அழைக்குது போர்க்குரல்.
தூரத்து விடிவெள்ளியில்
ஒளிருது என் பெயர்!

நம் நல்வாழ்வுக்காக,
உனக்காகவும் தான்
போகிறேன். போக விடம்மா!

அநேக பையன்கள்
போய் விட்டார்கள்.
சிலர் நிரந்தரமாக!

எனது பள்ளித் தோழர்கள்
இறந்து போனார்கள்.
எத்தனை பேர்!

நம் மண்ணில்
உறைந்த ரத்தம்
மேலும் மேலும் சிவக்கிறது
நம் தோட்டத்துப் பூக்களெல்லாம்
அஞ்சலி மலர் வளையங்களாய் மாறுது!

காலம் அழைக்கிறது
கண்ணீரால் கட்டி வைக்காதேம்மா!

நண்பர்கள் காத்திருக்கிறார்கள்
இதோ, கூப்பிடும் குரல்.
போக விடம்மா, அழாதே!

பார்க்க வேண்டாததெல்லாம்
பார்த்தாகி விட்டது, இதுவரை.
எத்தனை பயங்கரம்? குரூரம்?
இனியும் முடியாதம்மா!

என்னைக் கேளாமல்
என் வாழ்க்கையை எவனும் முடிக்க
அனுமதிக்க முடியாது!

இத்தனை சின்ன வயதில்
நான் தெரிந்து கொண்டதெல்லாம்
அத்தனை கைகளும்
துவக்குகளைத் தூக்க வேண்டும்!

நான் போக வேண்டும்.
மூடிவிட்ட கண்களின்
கனவுகளை நான் ஏற்க வேண்டும்!

இனி வரும் குழந்தைகள்
நான் பார்த்ததைப் பார்க்கக் கூடாது
நான் பட்டதைப் படக்கூடாது!

இது தீர்க்கமான முடிவு!
இரு. வருகிறேனம்மா!

— மகனீஷ்